egistered No. M. 2330

'SIDDHANTHAM
Vol. 24—No. 8

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

லர் 24 | கர ஆவணி 1951 ஆகஸ்ட் | இதழ்

உள்ளுறை

பத்திராசிரியர் : சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்

40, மூத்தையா முதலி தெரு, வேளாளதேனும்பேட்டை, சென்னை-6

30-6-51. திருப்பேரூரில் மைசூர் மன்னர் வழிபாடு : திருப்பேரூர் ஆலயத்து அறக்காப்பாளர்கள் மைசூர் மன்னர் பிரானுக்கு ஆலயத்தின்கண் வரவேற்பு அளித்தார்கள். மன்னர்பிரான் ஆலயத்துள் பட்டிப்பெருமான், நாயன்மார்கள், முருகக் கடவுள், பச்சைநாயகியம்மை, நடராஜப் பெருமான் முதலிய சந்நிதிகளுக்கு வழிபாடு செய்து, பட்டு ஆடை முதலிய வினியோகங்கள் செய்து, ஆறு அங்கமும் நிலத்தில் படிய வணங்கிக் கனகசபையில் உள்ள சிற்பங்களைக் கண்டு வியந்து வரவேற்புக்குப் பதிலளித்து நன்றி செலுத்தி மற்ற அலுவல்களுக்குச் சென்றார்.

9-7-51. புதுவைக் கல்விக் கழகம் – வெள்ளிவிழா : இறுதி நாளில் சித்தாந்த ஆசிரியர் தலைமை வகித்தார். வெங்கடாஜல ரெட்டியார் சிந்தாமணியைப் பற்றியும் சுவாமி வேலாயுதம்பிள்ளை அவர்கள் திருக்குறள் சொல் அமைதியைப் பற்றியும் பேசினார்கள். கழகத்தார் வெளியிட்ட விழா மலர் மிகவும் நேர்த்தியாக அச்சிடப்பட்டுச் சிறந்த கருத்துக்கள் அமைந்த கட்டுரைகளைக் கொண்டது. தமிழ் நாடு அதனைப் போற்றவேண்டியது கடமை.

10-7-51. சிதம்பரம் ஆனித் திருமஞ்சனத் தரிசனம் : ஆயிரக்கணக்கான மக்கள் நடராஜப் பெருமானைத் தரிசித்து ஆனந்தமடைந்தார்கள். ஆயிரக்கால் மண்டபத்திலும் நகரத்தார் விடுதியிலும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. சிவக்கவிமணி அவர்கள் இரண்டிலும் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

14-7-51. இராமநாதபுரத்தில் சன்மார்க்க சங்கம் தொடங்கப்பெற்றது. திரு. வி. சி. சுப்பைய கவுண்டர் அவர்கள் தலைமை வகித்தார்கள். வள்ளலார் திருவுருவப் படத்தை ஆசிரியர் திறந்துவைத்தார்கள். திருமதி. குழந்தையம்மாள் முதலியோர் பேசினார்கள்.

22-7-51. ஒரு பாராட்டு : கோவையில் நடந்த சைவ இளைஞர் சமாஜ மகாநாட்டில் வரவேற்புத் தலைமை வகுத்த ரா .கி. அவர்களுக்கு நீதிபதி பதவி கிடைத்ததற்காகக் கோவைப் பிரமுகர்கள் பாராட்டி விருந்தளித்தார்கள்.

29-7-51. சமரச சங்க மாநாடு : ஞானம்பிகை ஆலை வளைவில் திரு. சுத்தானந்த யோகிகள் தலைமையில் மாநாடு

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 24 | கர ஆவணி 1951 ஆகஸ்ட் | இதழ் 8

நாட்டு ஒலி

1. அறநிலயங்கள் :—உலகில் எந்த நாட்டிலும் அறநிலயங்கள் நிரம்ப உண்டு. நாகரிகம் அற்ற நாடுகளில் அறநிலயங்களைப் பரம்பரையில் வந்த தனி மனிதன் ஆட்சி புரிவான். அதனால் வரும் ஊதியம் அவனுக்கே சேர்ந்தது. அந்த நிலயம் பெரும்பாலும் மதசம்பந்தமாகவே இருக்கும். நாகரிகம் உற்ற நாடுகளிலோ அறநிலயங்கள் மக்கள் சமூகத்தினரால் ஆளப்படும். மக்கட் சமூகம் அவைகளின் ஆட்சி செவ்வையான முறையில் நடைபெற்றுவரக் கண் காணிப்புக் கொள்ளுவார்கள். அவ்வற நிலயங்கள் இரண்டு வகையினவாக இருக்கும். சமயச்சார்புப் பெற்றவைகளும் சமயச்சார்பு இல்லாதவைகளுமாக அவ்விருவித நிலயங் கள் இருக்கக்காண்போம். அவைகளின் ஆட்சியும் வெவ் வேறாக இருக்கும். சமயச்சார்பு உள்ளவைகள் பெரும் பாலும் அரசியல் சம்பந்தம் இல்லாதவைகள். சமயங் களில் ஈடுபட்ட தலைவர்களாலும் தலைவர்சங்கங்களாலும் கண்காணிக்கப் பெறுவன. அவ்வாட்சிக்கு ஏற்ற விதிகளும் அத்தலைவர்களாலும் சங்கங்களாலும் ஏற்படுத்தப்படுகின் றன. அவ்வாட்சிகளில் வழக்குகள் நேர்ந்தால் வழக்குகளைத் தீர்க்கத் தனியான சமயநீதி மன்றம் இருக்கும். அதில் அரசியல் ஒருக்காலும் புகாது. ஆனால் சில நாடுகளில் குடி அரசு இருக்குமானால் அதனை ஒட்டி அரசியல் சமயம்

என்பது ஒன்று இருக்கலாம்—அதற்குச் சேர்ந்த சமயநிலையங்களின் ஆட்சியும் அரசியல் சம்பந்தம் அல்லாத சமய மன்றங்களே நிர்வாகம் நடத்தும். இவ்வித நிகழ்ச்சியை ஆங்கில நாட்டில் காண்கிறோம். ஆங்கிலர் ஆட்சி முடியரசு ஆட்சியாகும். அவ்வரசைச் சார்ந்த சமயம் ஆங்கலிகன் (Anglican) சமயம் என்பது. அச்சமய ஆட்சியும் அச்சமய குருமார்களாலே நடத்தப் பெறுகின்றது. அதில் அரசியல் புகுவதில்லை. மற்றும் ஆங்கில நாட்டில் வேறு மதங்களும் உண்டு. மெதடிஸ்ட், கேத்தலிக் முதலிய மதங்கள் இருக்கின்றன. அவைகளின் ஆட்சியும் வேறானது. இனி குடியரசு நாடுகளிலோ அரசியலுக்கும் மத ஆட்சிக்கும் சம்பந்தமில்லை. மதங்களை மதக்குருக்களே பரிபாலிக்கின்றனர்.

இனிஉலகில் மதச்சார்பற்ற அறநிலையங்கள் கணக்கின்றி இருக்கின்றன. கல்வி, சமூக ஊழியம், அறச்சாலை, மருத்துவம் முதலியவைகளுக்கு அவ்வறநிலையங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளின் நிர்வாகத்தைப்பற்றி அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும். அரசாங்கங்களே விதிகளை ஏற்படுத்திக் கண்காணிப்பு ஏற்றுக்கொள்ளுவார்கள். அவைகளைப்பற்றிச் சட்டங்களும் திட்டங்களும் ஏற்படுத்துவார்கள். அதிகாரிகளும் நியமிக்கப்படுவார்கள். இம்முறை பொதுவாக எங்கும் உண்டு.

2. நம்நாட்டு அறநிலையங்கள் :—நமது தென்னாட்டிலும் அளவற்ற அறநிலையங்கள் இருக்கின்றன. அவைகளிலும் இரண்டு பிரிவுகள் உண்டு. சமயச்சார்பானவைகள் கணக்கின்றி நாடு எங்கும் பரவியிருக்கின்றன. சமயச்சார்பற்றவைகளும் எண்ணிக்கையின்றிப் பரவியிருக்கின்றன. இவைகளின் ஆட்சிகளைப்பற்றிப் பொதுமக்கள் அறிய வேண்டியது அவசியம் அல்லவா ? முதலில் சமயச் சார்பு உள்ளவைகளை எடுத்துக்கொள்ளுவோம். பண்டைக்காலத்தில் தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்தபோது சமயநிலையங்களை அரசியலாரே கண்காணித்து வந்தார்கள். சோழர்கள் காலத்தில் சமயநிலையங்களில் குற்றம் குறைகள் நேரிட்டால் அவை

களைத் திருத்தம் செய்து குற்றவாளிகளையும் தண்டித்து இருக்கிறார்கள். அந்நாளில் அரசர்கள் நாட்டுச் சமயங்களில் ஈடுபட்டவர்கள். ஆகவே அப்படிப்பட்ட ஆட்சியில் யாதொரு எதிர்ப்பும் இருக்காது. முகமதியர் ஆட்சிக் காலங்களில் சில குறிப்பிட்ட சமயநிலையங்களைத் தவிர மற்றவைகளில் முசுலிம் மன்னர்கள் பிரவேசிக்கவில்லை. உள்நாட்டு மக்களே சமயநிலையங்களைப் போற்றிவந்தார்கள். அக்காலத்து வழக்கப்படி சமய ஆட்சியிலும் பரம்பரைக் கொள்கை இருந்துவந்தது. பிறகு ஆங்கிலர்கள் ஆளத் தொடங்கின பொழுது சமயநிலையங்களின் மேல்பார்வை, கீழ் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. கிறிஸ்துவ பாதிரிமார்கள் ஆதிக்கம் பெருகவே அவர்கள் அவ்வித ஆட்சியைக் எதிர்த்தார்கள். அதனாலே ஆங்கில அரசாங்கம் சமயநிலையங்களின் பொறுப்பை விட்டு விட்டது. அதற்குப் பிரதியாக அங்கங்கே இருந்த உரிமையாளர்களுக்கும் மடத்தார்களுக்கும் ஆட்சிப் பொறுப்பைத் தந்தார்கள். இது நடந்தது 19-வது நூற்றாண்டின் முற்பகுதியில். பிறகு சில நிலையங்கள் செவ்வையாக நடைபெறாமல் போக, சமய ஆட்சியைக் குறித்து ஒரு சட்டம் நிறைவேற்றினார்கள். அது 1863-ல் அதன்படி சமயநிலையங்களை அறக்காப்பாளர்கள் ஆட்சியில் விட்டு அவைகளை மேல்பார்வை பார்க்கப் பிரதேச சங்கங்கள் ஏற்படுத்தி அவர்கள்பால் விடப்பட்டன. இந்த முறைகளே அனேக ஆண்டுகள் நடைபெற்றன. அவைகளில் கணக்கற்ற குறைகள் ஏற்பட, 1926-ல் ஒரு புதுச்சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி அறக்காப்பாளர் குழு ஒன்று அரசியலார்களால் நியமிக்கப்பட்டது. நாளதுவரை அக்குழுவே சமயநிலையங்களைக் கண்காணித்து வருகின்றது. தற்போது அச்சட்டத்தை மாற்றியமைத்து அதற்காகச் சட்டசபையில் ஒரு சட்டமும் நிறைவேறியிருக்கின்றது. அது இன்னமும் அங்கீகரிக்கப்படவில்லை. அதற்கு நாட்டில் எதிர்ப்புமிகவுண்டு. ஆகையால் ஜனாதிபதி அதனை ஆராய்ந்து வருகின்றார். இனி தற்போதுள்ள அதிகாரக் குழு என்ன செய்திருக்கின்றது என்று ஆராய்வோம்.

3. அறநிலையங்களைப்பற்றிச் சில புள்ளிகள் :— சமயநிலையங்களைப்பற்றிச் சிலபுள்ளி விவரங்களை நாம் அறிய வேண்டாமா ? அவைகளை அரசியலார் வெளியிட்ட அறிக்கையின்படி (G. O. No. 13-1-1951) இங்கே குறிப்போம். சென்னைமண்டலத்தில் உள்ள கோயில்கள் – 12,809, கட்டளைகள்-705, மடங்கள்-212 ஆகும். இந்த நிலையங்கள் மட்டும் ஆட்சியாளர்களுடைய பார்வைக்கு வந்திருக்கின்றன. பார்வைக்கு வராத கோயில்களும், மடங்களும் கணக்கற்று இருக்கின்றன. அவைகளைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டியதில்லை. மேலே கண்ட 13,726ம் மொத்த நிலையங்களையும் பார்வையிடுவதற்காக அறக்காப்பாளர் குழுவானது அவைகளிடமிருந்து ஒரு குறித்த தொகை வாங்குகின்றது. அந்தத் தொகை அந்நிலையங்களின் வருமானத்தில் ஒரு பகுதியாகும். அவ்வித வருமானம் சென்ற ஆண்டில் 10,75,249 ரூபாய். இதைத் தவிர நிலையங்களின் கணக்கைப் பரிசோதனை செய்ய மற்றொரு தொகை வாங்கப் படுகின்றது. அது 4,59,498 ரூபாய். இந்த இரு வகைகளிலும் கிடைக்கக்கூடிய மொத்த வருமானம் 15 லட்சம் ரூபாய் ஆகிறது. இப்பெருந்தொகை கொண்டு சமயநிலையங்கள் மேல்பார்வை பார்க்கப்படுகின்றன. மேலே கண்ட தொகையானது நிலையங்களின் மொத்த வரும்படியில் நூற்றிற்கு $4\frac{1}{2}$ வீதம் ஆகும். இதனைக்கொண்டு கணக்கிட்டால் நமது நாட்டுச் சமயநிலையங்களின் வருடவாரி ஆதாயம் இத்தனை என்று கண்டுகொள்ளலாம். மீண்டும் சொத்து மதிப்பையும் கூட அறியமுடியும்.

இனி, காப்பாளர் குழு இத்தனை வருமானம் பெற்றுக் கொண்டு என்னவேலை செய்திருக்கிறது என்று ஒன்றிரண்டு குறிப்புக்களைக் குறித்துக் காட்டுவோம். ஒவ்வொரு சமய நிலையமும் தங்கள் சொத்துப் பட்டியலை அறக்காப்பாளருக்கு அனுப்பவேண்டும். அதனை அறக்காப்பாளர் தணிக்கை செய்யவேண்டும் என்பது விதி. அவ்வாறு பட்டியல் அனுப்பிய நிலையங்கள் 1584. ஆகவே அனுப்பாத பன்னிராண்டாயிரம் நிலையங்கள் (12000) பட்டியலை

எழுதிக்கொடுக்கவில்லையா ? அவைகள் தணிக்கை செய்யப் படவில்லையா ? என்பது கேள்வி. மேலும் ஒவ்வொரு அற நிலையமும் தங்கள் எதிர்காலச்செலவுத்திட்டத்தை அனுப்ப வேண்டும் என்பது விதி. ஆனால் சென்ற ஆண்டில் 38 மடங்களும் 1072 கோயில்களும் 25 கட்டளைகளும் மட்டும் எதிர்காலத் திட்டங்கள் அனுப்பின. இந்த வகையிலும் 12500 நிலையங்களுக்கு மேலாகவே வரவு செலவுத் திட்டங் களை அனுப்பவில்லை என்று அறிகிறோம். இந்தப் புள்ளி களே செய்யவேண்டிய வேலை எம்மட்டும் செய்யப்பட்டிருக் கின்றது என்பதை அறிவிக்கின்றன.

4. காப்பாளர் குழுவின் வரவு சேலவுகள் :— சென்ற ஆண்டில் வரவு வகையில் கைப்பற்றின தொகை 10,03,290 ரூபாய். இதைத் தவிர கணக்குப் பரிசோதனைக் காக வசூலித்தது 3,77,534 ரூபாய். இந்த பரிசோதனை வரவில் எத்தனை செலவழிக்கப்பட்டது என்பது தெரிய வில்லை. ஆனால் மொத்த வரும்படியில் 10,55,000 ரூபாய் செலவழிக்கப்பட்டதாம். வருடக் கடைசியில் அதிகவரவு 1,50,000 இது பெருந்தொகை அல்லவா ? இந்தத் தொகை யால் அறநிலையங்கள் பெறும் பயன்கள் என்னவோ ?

மேலும் இந்த வகையில் ஆண்டுகள் தோறும் சேகரிக் கப்பெற்ற வருமானங்கள் பெருகிக்கொண்டு குவிந்து வரு கின்றன. காப்பாளர் குழுவிற்கு வருடக் கடைசியில் எல்லா வகைகளிலும் சேர்ந்திருக்கும் மொத்தம் 51,27,000 ரூபாய். இப்பெருந்தொகையில் சேமிப்பு நிதிகளில் பெரும்பான்மை தொகை சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றது.

சமயநிலையங்களிலிருந்து தொகைகள் வசூலிக்கப்பெற் றால் அவைகள் அந்நிலையங்களுக்குச் செலவழிக்கப்பட வேண்டாமா? பெருந்தொகைகளைச் சேமித்து வைப்பதனால் யாருக்கு என்ன பயன் ? வாணிபத் துறையில் இருப்பவர் கள்தான் லாபத்தைக் கருதிப் பணத்தைச் சேமித்து வைப் பார்கள். ஆலயப்பரிபாலனத்திற்கு ஏற்பட்ட ஒரு அதி காரக் குழுவினுடைய கடமை என்ன ? சமயநிலையங்களின் மேன்மைகளைக் குறித்துச் செய்யவேண்டிய பணிகள்

இல்லையா? இனித் காப்பாளர் குழுவானது சென்ற ஆண்டில் 13,640 வழக்குகளை நடத்தித் தீர்ப்புச் சொன்னதாம். இவைகளைத் தவிர சுமார் 700 மற்ற வழக்குகளையும் நடத்தினவாம். இந்த வகையில் தன்னுடைய கடமையைச் செலுத்தியிருக்கிறது. தவிர மேலதிகாரிகள் 965 நிலையங்களை நேரில் பார்த்திருக்கிறார்கள். அதற்காக 12,624 ரூபாயும் தங்கள் பயணச் செலவுகளுக்காகப் பெற்றிருக்கிறார்கள். மற்றும் வழக்குகளை விசாரிப்பதற்காக அடிக்கடி கூட்டம் கூடி இருக்கின்றார்கள். இவ்விதச் செயல்களெல்லாம் செய்தற்காகக் காப்பாளர்களும் கீழ் அதிகாரிகளும் 1,05,500 ரூபாய் செலவழித்து இருக்கிறார்கள். இப்பெருந்தொகைச் செலவினால் அறநிலையங்கள் பெற்ற பயன் யாது?

5. செய்யவேண்டிய கடமை:—நமது கோயில்களும் மடங்களும் பெறவேண்டிய நன்மைகள் பல உண்டு. மேற்படி நிலையங்கள் பெறுகிற நன்மையினால் அந்நிலையங்களுக்குச் செல்லுகிற பொதுமக்கள் பயன்களை அடையலாம். இவ்வாறாக ஏனைய நாடுகளிலும் உள்ள பொதுமக்கள் அங்கே உள்ள சமயநிலையங்களினால் நன்மை பெறுகிறார்கள். சமய உபதேசம், கூட்டு ஆராதனை, சமயக்கல்வி, மனச்சாந்தி, மருத்துவம் முதலிய உதவிகளைப் பெறுகிறார்கள். இவைகளேயன்றி ஆலயத்திருப்பணி, நூற்சாலை, சமய வெளியீடு, மருத்துவச்சாலை, பிரயாணிகளின் வசதிகள் முதலியவைகளுக்காக வருமானங்கள் செலவழிக்கப்படுகின்றன. மேலே கூறியபடி நமது நாட்டுச் சமயநிலையங்கள் தருகிற ஆதாயம் இந்த வகைகளுக்காகச் செலவழிக்கப்படுகின்றனவா? ஆலயங்களில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த தேவாரப் பாடசாலைகளும் ஓதுவார் கட்டளைகளும் மறைந்துபோய்விட்டன. பெரும்பான்மையான நிலையங்கள் பழுதுபார்க்கப்படாமல் இருக்கின்றன. சமய போதனைக்காக ஏற்பட்டிருந்த மண்டபங்கள் வாணிபத்துறைகளுக்காக விடப்பட்டிருக்கின்றன. மருத்துவ நிலையங்கள் இருக்கும் இடம் தெரியவில்லை. சமய உபதேசங்கள் சரியாகப் பரிபாலிக்கப்படுவதில்லை. நாகரிகம் பெற்ற நாடுகளில் நடை

பெறும் சீர்திருத்தங்களும் நமது நாட்டு ஆலயங்களில்நடை பெறுவதில்லை. சமய நிலைகளின் மேற்பார்வை வெறும் வாணிபத்துறையாக மட்டும் மாறிவிட்டால் அதனுல் ஆகக் கூடிய நன்மை யாது ? அறநிலையச் சட்டத்தை ஏற்படுத்திய வர்கள். இந்த முடிவை எதிர்பார்க்கவில்லை. நீதிமன்றங் களுக்கு வீணுகச் செலவழிக்கும் தொகைகளை நிறுத்தி மக்களுடைய சமய அறிவைப் பெருக்கவேண்டும் என்ற மேலான எண்ணத்துடன் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டது. ஆனுல் இப்பொழுதோ அது ஒரு பெரிய வாணி பத்துறையாகி கடமைகள் இல்லாத, உரிமை மட்டும் கொண்டிருக்கிற, ஒரு அதிகார நிலையம் என்று மேலே காட்டிய கணக்குப் புள்ளிகள் தோற்றுவிக்கிறதில்லையா ? பொதுமக்கள் இதனை ஆராயவேண்டும்.

6. சிறப்புப் பணிகள் இரண்டு :—அறக்காப்பாளர் அறிக்கையில் சிறப்பாக இரண்டு பணிகள் குறிக்கப்பட் டுள்ளன. கும்பகோணத்தில் உள்ள ஒரு வேத பாட சாலையை இவர்கள் எடுத்து நடத்துகிருர்கள். அப்பாட சாலை நாயக்கர்கள் ஆட்சியில் அப்போது அமைச்சராக இருந்த கோவிந்த தீக்ஷதர் ஏற்படுத்தியது ஆகும். அதற்கு வருமானம் வரக்கூடிய சொத்து உண்டு. முப்பது பிள்ளை கள் வேதங்கள், காரியங்கள் இவைகளில் பரீட்சை பெறு கிருர்கள். மற்றொன்று திருவையாற்றில் அம்மன் அக்கிர காரத்தில் உள்ள வேத பாடசாலை. இதற்கும் சொத்து உண்டு. அதன் வரும்படியைக் கொண்டு வேதம், ஆகமம், காரியம் என்ற மூன்றும் கற்பிக்கப்படுகின்றன. பிள்ளைகள் தொகை 11. இவ்விரண்டு பாடசாலைகளிலும் இலவசமாகப் பிள்ளைகளுக்கு இடம் உணவு படிப்பு இவைகள் தரப்படு கின்றன. இவைகள் நன்ருக நடத்தப்படுகின்றனவாம்.

வேதங்களுக்குக் காட்டப்படும் சலுகை தமிழ் மறை களுக்கும் காட்டப்படவேண்டாமா ? முற்காலத்தில் ஒவ் வொரு ஆலயத்திலும் ஓதுவார்கள் நியமிக்கப்பட்டிருந்தார் கள். பெரிய ஆலயங்களில் தேவாரப் பாடசாலைகள் இருந் தன. இப்பொழுது அவைகளை ஏற்படுத்த வேண்டியது

அறநிலையங்களின் பொறுப்பு அல்லவா? மேலும், மண்டபங்கள் சமய போதனைக்கும் உபன்னியாசங்களுக்கும் ஆக ஏற்பட்டன. அவைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டாமா? சமயப் போதகர்களுக்குப் பயிற்சி தருவதற்காகப் பயிற்சிச்சாலை ஏற்படல்வேண்டும். சென்ற இரண்டு ஆண்டுகளாகத் திருமலையில் சமயப் போதக் கோடைகால வகுப்பு நடைபெறுகின்றது. சுமார் 50 பள்ளி ஆசிரியர்கள் ஒருமாத காலம் அங்கே பயிற்சி பெறுகிறார்கள். அந்த வேலை மிகவும் சிறந்த வேலையாகும். அதைப் போலவே சைவசித்தாந்த சமாஜமும் ஆண்டுக்கு ஒருமுறை கோடைக்கால வகுப்பு ஒன்றை நடத்தி வருகின்றது. சென்னை அறக்காப்பாளர்குழு அதைப்போலவே ஒருமுறை நடத்தியதாம். ஆனால் அதை ஏன் கைவிட்டதோ தெரியவில்லை. மீண்டும் அதனைத் தொடங்கி நடத்துதல் அதன் கடமை என்று அறியவேண்டும்.

7. சமயச்சார்பு அல்லாத அறநிலையங்கள்:—நமது நாட்டில் சமயச்சார்பு அல்லாத அறநிலையங்கள் கணக்கில்லாமல் இருக்கின்றன என்று முன்னமே கூறியுள்ளோம். அப்படிப்பட்ட அறநிலையங்களுக்கு ஆங்கில நாட்டில் தனியான காப்புச் சட்டம் ஒன்று உண்டு. நமது நாட்டிலும் அதைப்போல் ஒன்றை இயற்றி நடத்த முயற்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதனைத் தனியாக ஒருசட்டம் ஆக்குவதற்கு மாறாக ஏற்கனவே உள்ள சமயக் காப்புச் சட்டத்தோடு இணைத்திருக்கிறார்கள். நாடு முழுவதும் சத்திரங்கள் உணடு. அவைகளுக்காகப் பண்டைய மன்னர்கள் தானங்கள் செய்துள்ளார்கள். சத்திரங்களைப் போலவே பாடசாலைகள், மருத்துவச்சாலைகள் முதலியன உண்டு. சமீபகாலத்தில் உபகாரச் சம்பளங்களும் பரிசுகளும் வழங்க வேண்டிப் பல பெரியார்கள் அறங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவைகள் எல்லாவற்றிற்குமாக ஒரு தனியான பாதுகாப்பு இருக்கவேண்டியது அவசியம்.

சென்னை அரசாங்கம் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் 2477 சமயச்சார்பு இல்லாத அறநிலையங்கள் இருக்

கின்றன என்று அறிகிறோம். அவைகளின் வரும்படி 50,16,500 ரூபாயும் 1000 கலம் நெல்லும் ஆகும். அவைகளில் 262 நிலையங்கள் அரசியலாரால் பார்க்கப்படுகின்றன. அவைகளின் வரும்படி சுமார் 23 லட்சம் ரூபாய். 1682 நிலையங்கள் பொதுமக்களால் பரிபாலிக்கப்படுகின்றன. அவைகளின் வரும்படி $15\frac{1}{4}$ லட்சம் ரூபாய். 120 நிலையங்களில் பாதி அரசியலும் பாதி பொது ஜனங்களும் ஆட்சிபுரிகிறார்கள். அவைகளின் வரும்படி $6\frac{3}{4}$ லட்சம். 413 நிலையங்கள் வரிவசூலித்து நடத்தப்படுகின்றன. வரும்படி 5 லட்சம். இவைகளிலே 1231 நிலையங்கள் பிரயாணிகளுக்காகவும் 358 ஏழைகளுக்காகவும் நடத்தப்படுகின்றன. இவைகளிலே 1340 பொதுநிலையங்கள். 1111 இந்து நிலையங்கள், 23 முஸ்லீம் நிலையங்கள், 3 வெள்ளைக்காரர்கள் நிலையங்கள் ஆகும். 12 லட்சம் பேர் இவைகளில் உதவி பெறுகின்றார்களாம். இந்நிலையங்களுக்குச் சொந்த நிலம் 30,250 ஏக்கர் என்று அறிகிறோம்.

8. பொதுமுடிபு :—மேலே சொன்ன அறிக்கைகளிலிருந்து பல குறிப்புகளை அறிகின்றோம். கணக்குப் புள்ளிகளையும் எடுத்துக்காட்டியிருக்கின்றோம். இப்புள்ளிகள் பொதுவாக மக்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே பொதுமக்கள் இவைகளில் கவனம் செலுத்துவதில்லை. தினசரிகளிலும் கூட இவைகளைப்பற்றி எழுதுவது குறைவு. கணக்கற்ற வருமானங்கள் வரக்கூடிய நிலையங்களைப் பற்றிப் பொதுமக்கள் அறியவேண்டாமா? அவைகள் சரியாய் நடக்கின்றனவா என்று பொதுமக்கள் கவனிக்கவேண்டாமா? அறநிலையங்கள் ஆகையினாலே இவைகளில் கிடைக்கக்கூடிய பயன்களில் பெரும்பான்மையைப் பொதுமக்கள் அடையவேண்டும். அதனையெல்லாம் உத்தேசித்து இந்தப் புள்ளிகள் இங்கே கொடுக்கப்பட்டன. சைவப் பெருமக்கள் இப்புள்ளிகளால் பயன் பெறுவார்களாக! தக்கவாறு நடைபெறுவதற்கான முயற்சிகளும் எடுத்துக்கொள்வார்களாக!

திருப்பாசூர்

1. இடம்: இந்தப் பாடல் பெற்ற ஸ்தலம் திருவள்ளூர் என்று வழங்கும் திருவெவ்வளூர் என்ற பெருமாள் தலத்திலிருந்து மேற்கே இரண்டு கல்லில் உள்ளது. பாதை நன்ருக இருக்கின்றது. வெகு எளிதில் செல்லலாம். ஊர் சிறிய ஊர். சிலதெருக்களே உண்டு. குடிகள் உழவுத் தொழில் செய்து பிழைக்கிருர்கள். பொதுவாக ஏழைகள். கோயிலுக்கு அருகில் ஒரு பழைய கோட்டையின் கொத்தளத்தின்மீது யாத்திரிகர் விடுதி ஒன்று கட்டியிருக்கிருர்கள். பெரும்பாலும் அதிகாரிகள் தங்குவதற்குப் பயன்படுகிறது.

2. திருக்கோயில்: கோயில் பெரியது. கருங்கல்லால் கட்டப்பட்டது. ஆனல் வெகு காலமாகப் பழுது பார்க்கப் படவில்லே. தளவரிசை, கோபுரம் முதலியவைகளின்மீது முளேத்திருக்கும் செடிகொடிகளும் எடுக்கப் படவில்லே. பழத்தோட்டம் ஒன்று இருக்கின்றது. அடிக்கடி திருட்டுப் போவதாகத் தெரிகின்றது. தெப்பக்குளம் உண்டு. ஆனல் உற்சவம் நடைபெறுவதில்லே. 56 தூண்கள் கொண்ட ஓர் அழகிய மண்டபம் இருக்கின்றது. அது உற்சவத்திற்காகக் கட்டப்பட்ட போதிலும் உற்சவம் நடைபெறுவதில்லே.

3. மூர்த்திகள்: சுவாமியின் பெயர் பாசூர் நாதர். தேவாரத்தில் 'பாசூர் அடிகள்' என்றும் 'பாசூர் பாஞ் சுடர்' என்றும் குறிக்கப்பட்டுள்ளன. வடமொழியில் வாசூரேசுவரர் என்று கூறுகிருர்கள். அம்மன் பெயர் பசுபதி நாயகி.

4. ஐதிகம்: இந்தத் தலத்து விருக்ஷம் மூங்கில். மூலஸ்தான மூர்த்தி மூங்கிலடியில் முளேத்ததாம். ஆகையால் தலப் பெயர் பாசூர் என்றும் சுவாமியின் பெயர் பாசூர் நாதர் என்றும் வந்தனவாம். குறும்பர் அரசனுக்குச் சார் பாகச் சமணர் கரிகால் வளவன்மீது ஏவிய பாம்பைப் பாம

சிவன் எழுந்தருளித் தடுத்து ஆட்டி அருளினர் என்பது தலமான்மியம். இந்தச் செய்தி பதிகங்களில் காணப்படுகின்றது.

மேலும் அப்பர் சுவாமிகள் அருளிச் செய்த திருக்குறுந் தொகையில் " அந்திக்கோன் தனக்கே அருள் செய்தவர், பந்திச் செஞ்சடைப் பாசூர் அடிகளே" என்று இருப்பதினல் இந்த ஸ்தலத்தில் சிவபெருமான் அந்திக்கோன் ஆகிய சந்திரனுக்கு அருள் செய்தார் என்று அறியப்படும்.

5. பாடல்கள் : இந்தஸ்தலத்தைப் பற்றிச் சம்பந்தமூர்த்திகள் ஒரு பதிகமும் அப்பர் இரண்டு பதிகமும் பாடியிருக்கின்றார்கள். அவைகளில் திருத்தாண்டகத்தில் அர்ச்சுனனுக்காகப் பெருமான் வேடனாய்ச் சென்று பன்றியைக் கொன்ற வரலாறும், முன்பிறவியில் சிலந்தியாய் இருந்தபோது நூலால் பந்தல் இட்டு வழிபட்ட காரணத்தினல் அரசனாகும்படி கோச்செங்கணானுக்கு இறைவன் அருளிச் செய்த வரலாறும், மற்றும் பலவும் கூறப்பட்டுள்ளன. மேலும் தலமான்மியம் உண்டு எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அது கிடைக்கவில்லை.

6. ஆட்சி : ஆலயத்திற்கு 650 ரூபாய் மேரை வருகின்றது. அதைக்கொண்டு தோட்டக்காரனுக்கும் பரிசாரகனுக்கும் ஊதியம் கொடுக்கப்படுகின்றது. குருக்களுக்கு மானியம் உண்டு. பொதுமக்கள் தருமம் செய்த இரண்டு கட்டளைகள் உண்டு. ஒன்று உச்சிக்காலக் கட்டளை, மற்றொன்று நால்வர் கட்டளை. இவைகளைச் சரியாக நடத்தினல் நன்றாக இருக்கும். —ம. ரா.

"சித்தாந்தம்"

(மலேயா டாக்டர் - விசுவலிங்கம் O.B.E., அவர்கள், கொழும்பு)

" மனிதனை மனிதனாக நடத்த வல்லது எது ?
அது ஒன்றே ஒன்று ; அதுவே தத்துவ ஞானம் "

மனிதன் பிரபஞ்சத்தைப் பற்றித் தான் கொள்ளும் கொள்கையினல், அதாவது, தன்னுடைய வாழ்க்கையின்

தத்துவ அறிவினல் தன் வாழ்க்கையை நடத்துகிருன். தத்துவ ஞானத்தைப் பற்றிய பெரும்பான்மையான அறிவு ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர்நாடி போன்றுள்ளது. எதைப்போல எனில் ஒரு உயிர்ச்சத்துக்கு எப்படி உணவு, காற்று, நீர் என்ற மூவகை ஆதாரச்சத்துக்கள் வேண்டுமோ அதைப்போலவே மனித வாழ்க்கைக்கும் அவ்வறிவு இன்றியமையாதது என்க.

ஏனெனில் ஒருவனுடைய வாழ்க்கைக்கு உயிர்ச் சூத்திரம் போன்றது தத்துவ ஞானம் ஆகும். தனிப்பட்ட ஒரு ஆள் அல்லது ஒரு இனம் என்பவைகளின் வளர்ச்சியை உறுதியாக்குவது நம்பிக்கை (விசுவாசம்)யே ஆகும். அவ் வளர்ச்சியானது பொதுமக்கள் உற்றிருக்கும் அறிவுமுதிர்ச்சியைப் பொறுத்திருக்கின்றது. அறியாமை தொலைக்காவிட்டால் மக்கள் இருட்டில் திண்டாடும் குருடர்களைப் போல் இருப்பார்கள். அப்போது அவர்கள் விருப்பு வெறுப்பு என்ற அலைகளால் மோதப்பட்டுப் பிறரால் வஞ்சிக்கப்பட்டுத் துன்புறுவார்கள். அப்போது ஒவ்வொரு சீர்திருத்தமும் அறியாமை என்னும் பாறையின்மீது மோதிக்கொண்டு அழியும்.

தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனும் சமூகப் பொறுப் புணர்ச்சி பெறும்படி எழுப்பப்பட வேண்டும். ஒவ்வொருவனும் அயலானுடைய சுமையில் ஒரு பங்கு ஏற்றுக் கொள்ள வேண்டும். எந்தக் கொள்கையோ நம்பிக்கையோ குறிப்பிடத்தக்கதாய் ஆகுமாயின் குணத்தையோ நடத்தையையோ செவ்வைப்படுத்துவதாயிருக்க வேண்டும்.

தமிழர்களின் பெருமை யாதெனில் தொன்றுதொட்டு அவர்களிடையே அன்ருட வாழ்க்கையைப் பண்படுத்தக் கூடியதும் அவர்களுடைய குணம் நடத்தை இவைகளை செவ்வைப்படுத்தக் கூடியதும் ஆன ஒரு நம்பிக்கை, தத்துவஞானம் கொண்டதே ஆகும்.

இந்தத் தத்துவஞானமோ, தமிழ்மக்கள் ஒப்பற்ற ஞான ஒளியில் தோன்றுவித்த சித்தாந்த ஞானமாகும். சித்தாந்தம் என்ருல் உண்மையான முடிவு என்று பொருள்.

அது தோல்விக் கொள்கைக்கு எதிரிடையாக நிரூபித்த கொள்கை கொண்டது. உண்மையான முடிவு மட்டுமல்ல, உண்மை ஒன்று மட்டுமே அது கொண்டது. அது சிறப்பாகச் சைவ ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டது என்றாலும் வேதங்களையும் (மறைகள்) அது ஏற்கும். ஆகவே தமிழ் ஆசிரியர்களிடம் அது சைவாத்துவிதம் என்று பாராட்டப்படுகின்றது.

சித்தாந்தம் தமிழ் நாட்டின் ஆன்மீகத் தத்துவத்தைத் தன்னுள் கொண்டுள்ளது. அதனுடைய நோக்கம் மனிதனை நன்றாக வாழக் கற்பிப்பதும் இறைவனையும் உலகையும் தக்க முறையில் அறிந்து எண்ணுவதும் ஆகும். அது தமிழர்களுடைய வாழ்க்கை நெறியும் ஆகும்.

இனிச் சைவ சித்தாந்தத்தின் உட்கருத்தைக் கூறுவோம். சித்தாந்தம் முப்பொருள் உண்மையைத் தெரிவிக்கிறது. அவை இறை, உயிர், தளை என்பன. மானுட சம்பந்தம் முழுவதும் பதி, பசு, பாசம் என்ற இம்மூன்று சொற்களில் அடங்கி உள்ளது. பதி என்பது இறைவன். அவனுடைய தன்மை ஒற்றுமை அல்லது ஒற்றைத்தன்மை. பசு என்பது உயிர் வர்க்கம். அதன் தன்மை கூர்தல் (வளர்ச்சி) ஆகும். கூர்தலே குவிதலையும் கொண்டுள்ளது. பாசம் என்பது உலகம் அல்லது பிரபஞ்சம் ஆகும். அதன் தன்மை எண்ணிக்கையாகும். உயிர் பதிக்கும் பாசத்திற்கும் இடையே அமைந்து நிற்பது. அது எதன் அருகே சார்ந்து இருக்குமோ அதனை ஒத்து இயங்கும். அதன் நோக்கம் கட்டு அல்லது தளைகளை ஒவ்வொன்றாகத் தள்ளி விட்டு முடிவில் பரம்பொருளாகிய பரசிவத்தில் சேருவது. தனு கரணபுவன போகங்கள் (உடல், புலன், புவி, இன்பம்) பசுவின் விடுதலைக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது தியாகம், ஒப்பு, அன்பு என்னும் முறைகளில் அடையப்படும். பதி ஞானம் பசுவின் விடுதலைக்கு மிகவும் இன்றியமையாதது. பதியினுடைய திருவருளின்றி அது கிட்டாது.

இதுதான் சைவ சித்தாந்தக் கொள்கை. இதனுடைய ஒப்பற்ற பெரும் புகழ்நிலைதான் நாம் அடைந்து நிலை நிறுத்-

திப்பாப்புகிற பெருமை வாய்ந்தது. கங்கைக்குரிய கௌடிப் பாதிரியார் என்பவர் கூறுவதாவது:– " சமயக் கொள்கைகளை நம்பி வாழ்க்கை நடத்தும் தன்மையில் சைவ சித்தாந்தம் தென் இந்தியாவில் எல்லாவற்றிலும் சிறந்தது. தென் இந்தியா மட்டுமல்ல, இந்தியா முற்றிலுமே இந்திய எண்ணப் போக்கு இந்திய வாழ்க்கை இவைகளின் உன்னத நிலை கொண்டது. அது தமிழர் சமயமாகும். அதன் முன்னர் ஏனைய சமயங்கள் புறச்சமயங்களே ஆகும்." இதைவிட உண்மை திகழ்ந்த வேறு சொற்கள் இதுவரை கூறப்படவில்லை.

ஆசிரியர் T. R. சேஷ ஐயங்கார் கூறுவதாவது :— " ஓர் இனத்தார் தம் கொள்கைகளை முற்றிலும் கூறித் தம் அடிப்படைக் கருத்துக்களையும் கூறுவதானால் அதுவே சமயமாகும். பண்டைய தமிழர்கள் வளர்ச்சியில் உச்ச நிலை அடைந்திருந்தார்கள். நற்கலைகளில் மட்டுமின்றி சமயத்திலும் மேம்பாடு அடைந்திருந்தார்கள். போர் புரிவதில் ஆவல் கொண்ட தமிழர்கள் வெயில் கொடுமையினால் விரைவில் பலவீனர்களாய் மன அமைதியைப் பெற்று உள் நினைவு கொண்டு மனச்சாந்தியினால் தம்பண்டை நாகரிகத்திற்கு ஏற்ற சமயத்தை வளர்த்தினார்கள்."

ஆசிரியர் பூரணலிங்கம் பிள்ளை கூறுகிறார்: " தமிழருடைய அன்றாட வாழ்க்கையில் சமயமே அவர்களுடைய உயிர் (ஆன்மீகம்) ஆகும். அது அடிப்படைத் தத்துவங்களிலே ஒன்று. இமயமலை தோன்றுவதற்கு முன்னமே கடல் கொண்ட குமரி நாட்டு மகேந்திர மலையிலே தமிழ் முறையானது நால்வர்களுக்கு உபதேசிக்கப்பெற்றது. அது அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கையும் உரைத்தது. ஆகையால் அது நான்காக வகுக்கப்பட்டு 'நான்மறை' என்றும், 'பண்டைய நான் மறை' என்றும் கூறப்பட்டது. அந்நான்கே பண்டைப் புனித நூல்கள் ஆகும். மறை என்றால் மனிதனுடைய மேலான தத்துவ நிலையில் உள் உறைவது என்று பொருள்."

சமயத் தத்துவம் அதாவது தமிழர் திவ்விய கலை ஞானம் ஆகமங்களில் அடங்கியுள்ளது. அது இறைவன் கடைப்பிடிச் சொல் ஆகும். அச்சொல்லிலிருந்து தமிழர் மூதுரையாகிய சித்தாந்தக் கொள்கை வெளிப்போந்தது.

நான்மறையின் உபதேசங்கள் வள்ளுவப் பெருந் தகையாரின் அழியாத நூலாகிய திருக்குறளில் அடங்கி யுள்ளன. தத்துவ ஞானமோ மெய்கண்டதேவர் தம் ஒப் பற்ற நூலாகிய சிவஞான போதத்தில் சூத்திரமாகக் கூறப் பட்டிருக்கிறது. ஆகவே, வள்ளுவரும் மெய்கண்டாரும் தமிழ் நான்மறை ஆகமம் இவைகளின் கொள்கைகளை எக்காலத்திற்கும் எல்லாருக்குமாகத் தந்திருக்கிறார்கள்.

தமிழர் சமுதாயத்தின் சிறந்த குணங்களின் ஒன்று சமயசமரசம் ஆகும். அது தாராளமாகக் கேட்டுத் தெளி வது எனலாம் அல்லது அறியும் தன்மையில் சுதந்திர நோக்கம் எனலாம். வள்ளுவர் அருளிச் செய்த நீதி நூலா கிய குறள் அறம் பொருள் இன்பம் என்ற வாழ்க்கைப் பொருள் மூன்றையும் மெய்கண்டார் அருளிய சிவஞான போதம் பதி பசு பாசம் என்ற உண்மைப் பொருள் மூன்றை யும் உரைப்பதில் அவைகள் உலகிற்கே பொது உடைமை யாக இருக்கின்றன. அவைகள் உலகிற்கே பொதுவானவைக ளாகையால் அவைகள் எல்லாக் காலங்களிலும் எல்லா ராலும் போற்றத்தக்கவை.

மேல் நாட்டார்கள் சமயத்தையும் தத்துவ ஞானத்தை யும் இரண்டு வெவ்வேறு இயல்களாக வகுத்து ஆராய்கிறார் கள். ஆனால் நமது பேராசிரியர்களோ பிரிவினை காட்டாது ஒரே தன்மையாக ஆராய்ந்திருக்கிறார்கள். ஆன்மீக உரை யும் சமய உண்மையும் வெவ்வேறல்ல என்றும் சமயமும் தத்துவஞானமும் ஒரே கொள்கை கொண்டனவாகவும் அவர்கள் கருதுகிறார்கள்.

உண்மைச் சமயக் கொள்கை அறிவு மயமானது. நம் பிக்கையும் அறிவுமயமாகா விட்டால் அதனால் பயனில்லை. உண்மைச் சமயமும் தத்துவ ஞானமும் ஒரே செயலைக் கொண்டவை; ஒரே நோக்கமும் கொண்டவை. பதிஞானத்

தில் இறைபணி நிற்றலே அதுவாகும். ஏனெனில் வீடு பெறுவதற்கு இறைவன் ஞானமும் உலக ஞானமும் ஒருங்கே வேண்டும். அறிவு பெறுதலால் மற்ற எல்லாச் செயல்களும் இரண்டாம் தரமாகும். அவைகளின் முடிவும் கீழ்த்தரமானதே.

சமயத்தின் உண்மை நிலை தத்துவ ஞான சாதனங்களின் மூலமாயன்றி அறியப்படாதவையாதலால் எல்லா மக்களுக்கும் அது எளிதில் கிடைத்தல் அரிது. உண்மைச் சமய ஆசாரியனே சமய நூல்களில் புதைந்து கிடக்கும் நுண்ணறிவுப் பகுதிகளைத் தத்துவஞானத்தோடு இணைத்துச் சமயஉண்மைநிலையைக் காட்ட முடியும். விவேகம் அல்லது பகுத்தறிவுதான் உண்மையை நிர்ணயிக்க வல்லது. விவேகம் எதனைப் பொய் என்று தள்ளுகிறதோ அது நம்பிக்கைக்கு ஏற்றதாகாது. விவேகமானது இறைவனுடைய தனித்தன்மையை அறியச் செய்வதில் குணங்கள் அடைமொழிகள் முதலியவற்றின் கூட்டுத் தொகுதிகளை விலக்கிவிடும். ஏனெனில் இறைவனுடைய தனித்தன்மை மிகவும் எளிய வகையில் உள்ளது. ஆகவே நமது திருமறைகளில் கூறப்பட்டிருக்கும் இலக்கியப் பகுதிகளை விளங்கவைப்பதில் தத்துவ ஞானத்தின் மூலமாக தனித்தன்மையை ஒற்றுமைப்படுத்த வேண்டும். இந்த முறையையே வெகு அருமையாக மெய்கண்டார் முதலான ஆசிரியர்கள் கையாண்டு விளக்கியிருக்கிறார்கள். ஆகவே, தத்துஞானமானது சமயஞானத்திற்குச் செல்லும்வழியை விளக்கிக் காட்டுவதற்கு விவேகமென்னும் ஒளிவிளக்கை ஏந்திச் செல்லும் தோழியைப்போன்று இருக்கிறது. 'நமது வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதகமாகச் சித்தாந்தத்தை வைத்திருப்பதின் ஏதுக்களை நாம் அறிவது எளிது. ஏனெனில் மதிப்பிடும் அளவைகளில் மானுடனுக்கு உயர்ந்தமதிப்பு அளவை கடவுள்ஞானமும் உலகஞானமுமே ஆகும். (அவையே பதிஞானம் பாசஞானம் என்க.) சிந்தனை, தெளிவு இவைகளை ஈட்டும் புலன்கள் மானுடனுக்கு உள்ளன வாதலால் அவனை மற்ற எல்லா உயிர்களிலும்

மேலாக அவைகள் வைக்கின்றன. சிந்தனை அறிவு தெளிவு இவைகள் நமது இனத்தார்க்குச் சிறப்பாக உள்ளன வாதலால் மெய்கண்டார் முதலிய பரமாசாரியர்கள் நம்மில் தோன்றிச் சித்தாந்தம் என்ற உயரிய கொள்கைத் தொகுதியை வகுத்து நமக்கும் ஏனையமக்களுக்கும் எக்காலத்தும் உதவக்கூடிய மலை அரணாக இயற்றி அருளிச் சென்றிருக்கிறார்கள்.

நுண்ணிய அல்லது ஆன்மீகக் கருத்துக்களையும் அவைகளை வாழ்க்கையில் பயன் படுத்தும் முறைகளையும் அவனவன் பேசும் மொழியில்தான் பக்குவமாக உரைக்க முடியும். எவன் எந்த மொழியில் பிறந்து பேசுகிறானோ அந்த மொழியிலேதான் அவனுடைய உள்ளத்தெழும் உணர்ச்சிகளையும் நுண்ணிய கருத்துக்களையும் ஆசாபாசங்களையும் நன்கு உணர்த்த முடியும்.

தமிழ் மக்கள் தங்கள் பண்டை நிலைக்கு ஏற்றவாறு தாம் வழங்கும் மொழியையும் வளர்த்திருக்கிறார்கள். சிறந்த அகராதி யாசிரியர் சங்கை மிக்க பெர்சிவல் என்பவர் தமிழையும் பற்றி இவ்வாறு கூறுகிறார்: " வேறெந்த மொழியும் இது கொண்டிருக்கும் அத்தனை ஆற்றலோடு சுருங்கச் சொல்லுதலையும் கொண்டிலது. நெஞ்சில் உள்ளதை வெளியிடும் தன்மையில் உண்மை அறிவு இம்மொழியைப் போல வேறெந்த மானுட மொழியும் இல்லை........ இம்மொழி மனதிற்குத் தக்கவாறுஎளிதில்விளக்கிவைத்துக் கடினமான தத்துவ ஞானத்தையும் எளிய சொற்களில் தெளிவுபடுத்தும் இயல்பு கொண்டது " என்கிறார்.

மனிதனால் பேசப்பட்ட மொழிகளில் மிகவும் விரிந்ததும் பண்புடையதும் ஒளிதிகழ்ந்ததும் ஆனது தமிழ் மொழி ஆகும். எல்லாவற்றிலும் மிகப் பழையது அல்லது பண்டையவைகளில் ஒன்று ஆகவும் உள்ளது. அது இயற்கையமைப்பை அடிப்படையாகக் கொண்டது. பேசும் கருவியாகிய மிடற்றிலிருந்து இயற்கையாகத் தோன்றும் ஒலிகளைக் கொண்டது. அவ்வொலிகள் உணர்ச்சி, விருப்பு, வெறுப்பு முதலியவைகளை இயற்கையாகக் காட்டக்

கூடியவை. அதன் எழுத்துக்களும் இயற்கை ஒலி வளர்ச்சி களைத் தோற்றுவிக்கக்கூடியவை. ஒவ்வொரு எழுத்தும் ஒவ் வோர் இரகசியத்தைக் காட்டுவது ஆகும். வேறெந்த மொழி யின் எழுத்துக்களும் இந்த தத்துவத்தைக் கொண்டிலது.

மிகக் குறைந்த அளவைக் கொண்டு கூறினாலும் தமி ழகத்து இலக்கிய வரலாறு 2500 ஆண்டுகளுக்குக் குறை யாமல் எட்டியிருக்கிறது. வேறெந்தமொழியிலும் தமிழைப் போல அத்தனைச் சிறந்ததும் பண்டை நிலையும் கொண்ட இலக்கியம் இல்லை. மக்கள் சமுதாயத்திலேயே மிகவும் பண்டைய இனத்தார் ஆகிய தமிழர் மிகச் சிறந்த மொழி சமயம் ஞானம் இவைகளை வளர்த்தி இருப்பது இயல்பே. அவைகளை வளர்த்தி யிருப்பதில் அவர்களுடைய எண்ணங் கள் வாழ்க்கைப் போக்கு இவைகளை உயிர் இறைவனோடு உடன் உறையத்தக்க நிலை பொருந்தவும் உள்ளும் புறம்பும் பரம ஒளியைப் பாப்பவும் சிவதத்துவம் அல்லது வீடு பேற்றினை அடையவும் கூர்தல் கொண்டுள்ளது. ஏனெனில் தமிழில் இறைவனுக்குக் கடவுள் என்ற பெயர் உண்டு அல்லவா ? கடவுள் என்றால் புறம்பும் உள்ளும் உள்ளது. அதாவது வெளிக்கு வெளியும் உள்ளுக்கு உள்ளும் அமைந் தது என்பதாகும். இப்பண்டை மக்களின் கருத்தில் கடவுள் உருவமற்றவர், ஆனந்தமயமானவர், எங்கும் உள்ள வர் என்பதாம். ஆகவே அவர்கள் கடவுளின் உண்மை இயல்பை அறிந்து கொண்டவர் என்க.

மனித வாழ்வில் பல பகுதிகளாக இயங்கியும் தனித் தனியாகப் பிரிக்க இயலாதவையுமான சமயம், ஞானம், மொழி, பண்பாடு இவைகளில் ஊடுருவிச் சென்று அவை களை இணைத்து நிற்கும் நூல் ஒன்றே இருத்தல் போலச் சுத்த மெய்ஞ்ஞானமும் இறையுடன்இரண்டறக் கலத்தலும் என்ற இரண்டிலும் நம்பிக்கை என்ற நீரூற்று ஊடுருவிப் பாய்கின்றது.

நாமோ தொழில் கிளர்ச்சிக் காலத்தில் வாழ்கிறோம். எங்குப் பார்த்தாலும்பெருவாரியானஉற்பத்தித் தன்மையே காண்கிறோம். மக்களுடைய எண்ணப்போக்கிலும் குணத்

திலுமேயன்றி, சாக்கு உற்பத்தியிலும் பெருக்கத்தையே காண்கிறோம். தற்கால அமைப்போ தனி மனிதனை வருத்து நிற்கும் வெறும் குறியாக இறங்கி விடுகிறது. பெரிய குடியரசுச்சமூகங்கள் எண்ணிக்கைகளைக் கொண்டே ஆளப்படுகின்றன. சராசரிகளைக் கொண்டு கணக்கிடப் படுகின்றன. கணக்குப் புள்ளிகளால் பேசப்படுகின்றன. சுலோகங்கள் அல்லது பொறுக்கு மொழிகளால் எண்ணப் படுகின்றன. பொதுமக்கள் தமக்காகவே நினைக்கமுடியாத படி அத்தனை மடமை பூண்டிருக்கிறார்கள். ஆனாலும் எல்லாவகைகளிலும் அறிவின் எல்லை அகன்று வருகின்றது. தன்னம்பிக்கைகள், தற்கால மனிதனுடைய தத்துவங்கள், சுய நிலைகள் இவைகளை எல்லாம் இந்த மாறுதல்கள் கலைத்து விடுகின்றன. ஆன்மீகக் கலவரக் காலத்தில் சமய நம்பிக்கைச் சூழலில் நாம் வாழ்கின்றோம்.

தற்காலத்தில் பௌமீக லோகாயதத்திற்கு ஏற்ற மருந்து சித்தாந்த உணர்வேதான். நாம் திடமான நம் பிக்கையை இழந்து இருந்தால், நமது இலட்சியத்தை இழந் திருந்தால், நமது சமயத்தை இழந்திருந்தால் அதற்குக் கார ணம் குறிக்கோள் திட்டமும் நம்பிக்கை நிலைத்திருக்க வல்ல ஆதாரமும் இல்லாமையே ஆம். நாமோ சித்தாந்த உணர்வை இழந்தோம். கட்டுப்பாடில்லாத பிதற்றுதலுக்கும் தற்கால ஆசாபாசங்களின் அநாகரீகத்திற்கும் இடம் கொடுத்து ஆன்மீக அமைதியைத் தந்து விட்டோம். " இவ்வுலகில் பிறந்ததின் பயன் இறைபணி நிற்றலே." நேர்மையில் நோக்கம் கொள்ளும் விருப்பு வெறுப்புகளால் தாக்கப்படாது, அழகையும் மேம்பாட்டையுமே அறி தலும் கிடைக்கப்பெறாத கொடையாகும்; எவராலும் முழு மையும் கொள்ளப் பெறாததாகும். ஆனால் மனிதனுடைய ஆராய்ச்சியின் இடையிலும் மனோ ராச்சியத்தின் சூழலி லும் இடையில் அவனை ஆணையிட்டு நிலைநிறுத்தும் ஒரு சிறந்த விதி ஒன்று இருக்கிறது. அதுதான் அவனைக் காலா காலங்களில் இயற்கையில் மீண்டும் நிலை நிறுத்துவதும் சித் தாந்த உண்மையில் அவனை மீண்டும் புகுத்துவதும் ஆகும்.

தற்காலத்தில் வாழ்க்கையின் உலகீயப் பகுதியே மனிதனுடைய நெஞ்சை கவர்ந்திருக்கிறது. நாடோறும் நாம் வாழும் வாழ்க்கையோ உலகீய உணர்ச்சி, உலகீய செல்வாக்கு, விஞ்ஞானக் கலை கொண்டு புதிய கருவிகளின் உற்பத்தி, அவைகளைக் கொண்டு வாழ்க்கையை வாணிபமாக்குவதில் பெருமுயற்சி இவைகளால் பரிபாலிக்கப் படுகிறது. நாம் உண்மையை ஆராய்வதில் சித்தாந்த உணர்ச்சிக்கும் ஒழுக்க முறைகளுக்கும் மீண்டும் செல்ல வேண்டும்.

உலகீய மென்னும் சிறைக் கோட்டத்திலிருந்து வெளியே நோக்கவும் எங்கிருந்து ஆன்மா வாழ்வு பெற்றதோ அந்த இடமாகிய வீட்டு நெறியை (பரமபதம்)க் காணவும் நமக்கு உதவிவருவது சித்தாந்தத்தினுல்தான். விஞ்ஞானி நினைக்கும் ஒப்பற்ற ஒற்றுமை சித்தாந்தத்தில் தான் உண்டு. பரமசிவத்தின் எட்டுசக்திதான் விஞ்ஞானி கனவு காணும் மேல் நிலை ஆற்றல் ஆகும். பரமாணுக்கள் (எலெக்ட்ரான்) கொண்டிருக்கும் இடைவிடாத அசைவுகள் தான் சிவபெருமானின் பேரின்பக் கூத்து (ஆனந்தநடனம்). விஞ்ஞானி சொல்வதோ மனிதனுடைய மனோதத்துவத்தினுல் அறியக்கூடாதவை. அதீத உண்மைகள் என்பது சித்தாந்தம் கூறுவதோ இறைவனுடைய அருளினுல் அவைகளை அறிய முடியும் என்பதே. உலகக்கட்டு என்னும் பாசத்திலிருந்து விடுதலை பெற்று மனிதனுடைய ஆன்மீகப் பேற்றிற்கு எவன் செல்லுகிறுனே அவனுக்கு இறைவன் காட்சி தருவான். நித்தியமாய் சர்வவியாபகமாய் நின்று ஆடும் ஆனந்தக்கூத்தில் பிரபஞ்சத்தில் நடுநாயகமாகிய மானிட இதயச் சிதாகாசமாகிய சிதம்பரப் பேரின்ப மன்றுள் அவனுடைய திவ்விய ஞானம் எல்லாவற்றையும் தழுவிக்கொண்டு எல்லாரிடத்தும் ஆனந்தமயத்தைப் பொழிந்து கொண்டிருக்கும். விஞ்ஞானியும் உடம்பு நுழையா இடத்தில் மனது செல்லும் என்று ஒத்துக் கொள்கிறுன். நமது அடியார்களோ இதனை முன்னமே அறிந்து தங்கள் மனோதத்துவத்தின் ஒப்பற்ற ஒரு பொருளை உணர்ந்திருந்தார்கள். அண்டங்கள், புவனங்கள்,

உலகங்கள் முதலியன அவைகளைக் காணுபவர்களால் காணப்படுபவை. விஞ்ஞானி அறிவுபெற வேண்டி உருக்குத் தொன்னைகளிலும் தூரக்கண்ணாடிகளிலும் தேடிக் கொண்டிருக்கிறான். சித்தாந்தமோ தற்கால மனிதன் கண்டுபிடித்த முடிவுகளை யெல்லாம் முன்னமே கண்டு கொண்டு ஒழுங்காகவும் சரியானதுமான இயற் கலை ஞானத்தை விரித்திருக்கிறது. ஆகவே, சித்தாந்தம் எல்லா அறிவையும் தன்னுள் அடக்கிக்கொண்டு உண்மையான முடிவாக விளங்குகிறது என்க.

---

4. சமயப் பகுதி

அறவாழ்வு

(அ. தா. பா. திருஞானசம்பந்தன், திருவண்ணாமலை)

வாழ்வு பல திறத்தன. அவை உண்கின்ற வாழ்வு, உடுக்கின்ற வாழ்வு, உறங்குகின்ற வாழ்வு என சுருங்கச் சொல்லி அடங்கவைக்கலாம். மேற்கூறியவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட வாழ்வொன்றுண்டு. அஃது என்னை? அது தான் அறவாழ்வாகும். இத்தகைய வாழ்வை வாழ்ந்து காட்டியவர்கள் நாட்டில் உண்டா? உண்டு. அவர்கள் யார்? உயர்ந்தோர் போற்றும் உத்தமக் குறள் நூலை அளித்த வள்ளுவர், வன்தொண்டர், காழிவேந்தர், மணிவாசகர் பிரகலாதர் போன்றவர்களே. இவர்கள் அனைவரும் வாழ்வில் அறப்போர் நிகழ்த்தியவர்களே. அப்போரில் தாங்கள் பெறுதற்கரிய பல கருத்துரைகளைத் தேடிக்கண்டு, சேமித்து, நமக்கு இன்றைய அறிவுக் கருவூலமாகக் கொடுத்துச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் புரிந்த அறப்போர்கள் இறைவனுடன் தொடர்புகொண்டு விளங்கின. இங்ஙனம் விளங்குமாற்றால், வன்மை பொருந்திய வார்த்தைகள்—உலகை உய்விப்பன—திண்மை பொருந்திய அவர்கள் மனத்தினின்றும் எழுந்தன. ஏன்? இன்னும் விளக்கமாக அறவாழ்வின் நீர்மையை உணரவேண்டின் தெய்வச்

செந்தமிழ் மணங்கமழும் சேக்கிழாரடிகளின் பெரியபுராண வரலாற்றைக் காண்போர்க்கு, உண்மை போதருதல் ஒருதலே. என்ன உண்மை பெறுகிறோம் ? பெரிய புராணத்துள், சிறப்பிக்கப்பட்டுள்ள அடியார்களில் பல்லோரும், தம் மனைவி மக்களுடன் வாழ்ந்து, அறம் இயற்றி, அவ் வாழ்வில் இன்புற்றுச் சிறந்தார்கள் என்பதைப் பெறுகிறோம். எனவே இல்லற வாழ்வே அறவாழ்வென்பதையும், ஏனைய வாழ்வுகளெல்லாம் மறவாழ்வென்பதையும் உய்த்து உணாற்பாலது. இனி அறத்தின் தன்மையும், அதனைவளர்க்கத் தகுதியுடையார் நிலையையுங் காணுமுகமாகச்செல்வோம்.

இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாகும். அதனோடு பொருந்தாமல் வருவனவெல்லாம், அப்பொழுது இன்பம் போலக் காணப்படினும், துன்பத்தின் இடத்தனவாகும். அதுவுமல்லாமல் புகழும் உடையன அல்ல என்பதாம்.

> அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
> புறத்த புகழு மில. —குறள்

இல்லற வாழ்வே, அறஞ்செய்து சிறத்தற்கு சிறந்த வாழ்வென்பதைக் காண்க. அறவாழ்விற்கு அறநூல்கள் எத்துணை யளவிற்குத் துணை செய்கின்றன. அதனால் அவை உயர்வு பெறுகின்றன என்பதை அறநெறிச் சாரமளித்த முனைப்பாடியார் வாயிலாகக் கேட்டு இன்புறுவோமாக.

பாவத்தினை வளர்க்கும் நூல்களும், ஆசையினை வளர்க்கும் நூல்களும், பிறவற்றினை வளர்க்கும் நூல்களும், கலந்து நிறைந்த உலகில் அறத்தினை வளர்க்கும் நூல்களைக் கேட்கின்ற நற்பேற்றினை உடையவர்களே பிறப்பினை நீக்குதற்கேற்ற வீட்டுலகினை அடைவர் என்கிறார் முனைப்பாடியார்.

> மறவுரையும் காமத் துரையும் மயங்கிப்
> பிறவுரையும் மல்கிய ஞாலத்—தறவுரை
> கேட்கும் திருவுடை யாரே பிறவியை
> நீக்கும் திருவுடை யார்.

அறத்தினை வளர்க்கும் நூல்களை கசடறக் கற்றுணருங் காலத்து, நம்மை, அவை அதன்வழி நடக்கத் தூண்டு கின்றன. அற நூல்கள் நம் வாழ்வென்ற விளக்கினை ஒளி விட்டு வளரச் செய்தற்குத் தூண்டுகோலாக அமைகின்ற தெனலாம். அறவாழ்வே சிறந்த வாழ்வு. அஃதும் மனைவியுடன் கூடி இல்லறவாழ்வில் இன்பந்துய்த்து,

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர் கோடலும்" —சிலப்பதிகாரம்

என்ற இளங்கோவடிகள் வகுத்துள்ள வழியில் நின்றொழு கலே சாலச் சிறந்ததாகும். பட்டினப்பாலையுள் "உருத் திரங் கண்ணனார்" வாழ்வின் செம்மாப்பைப் படம்பிடித் துக் காட்டுவதைக் காண்மின்! அவர் கருத்தோவியத்தில், அறத்தின் தன்மையை அறுதியிட்டு அளந்து தீட்டியுள்ள தையுங் கண்டு களிபேருவகை கொள்க!

"கொலை கடிந்துங், களவு நீக்கியும்,
அமரர்ப் பேணியும், ஆவுதி யருத்தியும்,
நல்லானொடு பகடு ஓம்பியும்,
நான்மறையோர் புகழ் பரப்பியும்,
பண்ணியம் அட்டியும், பசும்பதங் கொடுத்தும்,
புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை,
கொடு மேழி நசை உழவர்
நெடு நுகத்துப் பகல் போல
நடுவு நின்ற நன்னெஞ் சினோர்
வடுவு அஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
[கொடுப்பதூஉங் குறைபடாது
பல் பண்டம் பகர்ந்து வீசுந்
தொல் கொண்டித் துவன்று இருக்கை"

(தெ - பொ - ள்) கொலை களவு நீக்கிக் கடவுளரை வணங்கியும், வேள்விகள் வேட்டும், எருது முதலியவை களைப் பாதுகாத்தும், நான்மறை வல்ல அந்தணர்களின் புகழைப் பரப்பியும், விருந்தினர்க்குப் பல பண்டங்களைக்

கொடுத்தும், சோறுதந்தும், நல்வினையினின்றும், பிறழாத அன்பு சுரக்கும் வாழ்வையுடைய உழவுத் தொழிலை விரும்பும் வேளாளர் நடுநிலை நின்ற சிறந்த உள்ளத்தினராய் பழியை அஞ்சி, உண்மையே பேசி, தம்முடைய பண்டங்களையும் பிறருடைய பண்டங்களையும் ஒப்பாகப் பார்த்துத் தாம் பிறர் பொருள்களை விலை கொள்ளுங்கால், விலைக்கு மேல் அப்பொருள்களை மிக அளந்து வாங்காமலும், தம் பொருள்களைப் பிறர்க்கு விலைப்படுத்துங்கால் அவர் கொடுக்கும் விலைக்கு, அவற்றைக் குறைய அளந்து கொடாமலும், ஊதியத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்பர் என்பது நன்கு விளங்குகிறது. இதனால் நாமறிவது, இச்செய்யுளை யாக்க வந்தப் புலவர், உழவரின் சிறப்பையும், அவர் தொழிலின் சீர்மையும் விளக்கும் முகமாக அறத்தின்பாதை இதுவென அழகாக வகுத்துக் காட்டுகிறார். உழவரைச் சிறப்பு செய்ய அன்றோ இப்பாடல், இங்கு இடம் பெற்றுள்ளதென எண்ணுதல் மிகையாகும். ஒவ்வொரு தொழில் மேற்கொண்டுள்ளாரும், உழவர் எனச் சிறப்பு செய்யப்பட்டுள்ள இடத்தில், தங்களையும் தங்கள் தொழிலையும் அமைத்து ஒருமை காணுவார்களேயாமாகில், அவர்கள் வாழ்வெல்லாம் அறவாழ்வாகவே மாற்றம் எய்தும் என்ற உண்மையை உன்னி நோக்கல் வேண்டும்.

அறவாழ்வைக் கண்டோம். அவ்வாழ்வை வாழ வழியை வகுத்தளித்து நிற்கும் நூல்களைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். சங்கத் தமிழ் நூல்களைக் கற்குங்கால் ஒரோவழி நின்று வீண் வாதம் புரியாது, பொதுக்கண்கொண்டு ஆராய்வோர்க்கு, இன்பம் பற்றியே மிகுதியும் வற்புறுத்தும் பாடல்களைக் காண்பர் என்பது தெளிந்த உண்மை. சங்கத் தமிழ் நூல்களில், அறம் பற்றிய செய்யுட்கள் 15௩3-ம் பொருள் பற்றிய செய்யுட்கள் 1523-ம் (இல்லறம்) காதலின்பம் பற்றிய செய்யுட்கள் 2494ம் உளதென ஒருவாறு பெறப்படும். இல்லற இன்பம்பற்றிய செய்யுட்களே மிகுதியாக இடம் பெற்றுள்ள காரணம் என்ன? என்பதே ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு உரிய ஒன்றாகும். அன்பின்வழி

நின்றே அறம் வளர்ந்ததென்பதை ஆராய்ந்து பார்ப்போர் நன்குணர்வர்.

உண்மை அன்பு இன்றிப் பகட்டுக்காகச் செய்யும் ஆரவாரமெல்லாம் அறமாகா. இதனைத்தானே உலகம் புகழும் உயர்குறள் நூலை அளித்த வள்ளுவப் பெருந்தகையாரும் :

தருமம் செய்பவன் தன் மனத்தினிடத்துக் குற்றமில்லாதவனாக இருக்கவேண்டும். அவ்வளவே தருமமாவது. அக்குற்றமுள்ளவன் சொல்லும், செயலுமாகிய தருமங்கள் தன்னை யெல்லோரும் புகழும்படிச் செய்யும் ஆரவார குணமுடையன அல்லாமல் தருமமென்று சொல்லப்படாதென்பதாம். இதனால் மனம் பரிசுத்தப்படாதவன் செய்யுந் தருமங்களாற் பயனில்லை என்பதைக் காண்க.

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. —குறள்

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை —தொல்காப்பியர்

எல்லா உயிர்களிடத்தும், எவ்வுயிர்க்குந் எவர்க்குந் தீங்கு நேராத முறையில் பெயர், புகழ்களை வேண்டி நிற்காது. அறஞ்செய்வாராயின், அவர்செய்யும் அறமே தமக்கும், பிறருக்கும் உண்மையிற் பயன் உடையதாகும். ஆகவே அன்பு ஒன்றே உயிராகக்கொண்டு நடைபெறும் அறத்தை எடுத்து வற்புறுத்தும் ஆசிரியர் தொல்காப்பியனார் தமது சிறந்த கோட்பாட்டிற்கு மாறுபாடில்லாது அவ்வறத்தை ஒன்றாகவே கூறினாரல்லது "இல்லறம்", "துறவறம்" என இரண்டாகப் பகுத்துத் தாம் இயற்றிய தொல்காப்பியத்தில் யாண்டுங் கூறினாரல்லர். இம்மை இன்பம் விழைந்து, தன் மனைவி மக்களோடு ஒருங்கிருந்து நடாத்திய அன்பு வாழ்க்கையும், மறுமையின்பம் விழைந்து மனைவி மக்கள் தமக்குத் தொண்டு செய்ய இம்மை முயற்சியை விட்டு, இறைவன் திருவருளில் தமது உணர்வினைத் தோய்வித்திருக்குந் தவ வாழ்க்கையும் ஓர் அறத்தினுள்ளேயே அமைந்த இருவகை நிலைகளாகுமல்லாமல் அவ்விரண்டும் ஒன்றோடொன்று

மாறுபட்டன அல்ல என்பதே தொல்காப்பியனார் கருத்தாதல்,

“ காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.”

என்று எழுதியுள்ள கற்பியல் சூத்திரத்தான் தெற்றென விளங்கா நிற்கும். காதல் அன்பால் துய்ப்பதே காமமாம். அது நிறைந்து கடைக்கொண்ட வாழ்நாள் எல்லையின் நடுக் காலத்தே, தமக்குக் காவலாய் அமைந்த தம் புதல்வரொடு கூடியிருந்துந், தாம் அதுவரை செய்து போந்த அறத்தை இனித் தாம் செய்யவியலாமையின் தமக்காக அவ்வறத்தைச் செய்யும் சுற்றத்தாருடன் அமர்ந்துங் குடும்பக் கிழவனுங் கிழத்தியும் சிறந்ததாகிய தவத்தில் தமது உணர்வினைப் பயிலச் செய்தல் தாம் அதுவரை நிகழ்த்திப் போந்த காதல் மனைவாழ்க்கையின் பயனும் என்பதை உணர்க. இதுவே மேற்கண்ட சூத்திரத்தின் கருப்பொருள்.

எனவே காதலன்பிற் சிறந்த கணவனும், மனைவியும் ஒருவரை யொருவர் பிரியாதிருந்து, தவஞ் செய்யற்பால ரென்பதையும், அப்போது அவர்தம் புதல்வராயினர் அவர் தவ வாழ்க்கைக்கு வேண்டுவனவெல்லாந் தேடிக் கொடுத்து அவர்க்குந் துணையாக நிற்கற்பாலரென்பதும், அவர்க்குச் சுற்றத்தாராய் உள்ளவர், அவர் தவவாழ்க்கையில், அமர்ந்த காலந் தொடங்கி, செய்யாதுவிட்ட அறங்களை யெல்லாஞ் செய்துகொண்டிருக்கற்பால ரென்பதும் நன்கு அறியக்கிடக்கின்றன. தொல்காப்பியர் எடுத்துக்கூறிய நந்தமிழ் முதுமக்களின் மனைவாழ்க்கையும், அதன் முடிவில் நோற்கப் படுவதாகிய அவர்தந் தவ வாழ்க்கையும் எவ்வளவு சிறந்தனவாய் இருக்கின்றன என்பவற்றை உற்று நோக்குமின் அன்பர்களே !

திருந்தாத நெறியுடைய, முன்னைய சமணமும், பௌத்தமும், அவற்றைக் கால்கொண்டெழுந்த வடவர்தம் நூல்களும், தவ வாழ்க்கையைத் துறவு நெறியின்பாற்படுத்தி

மனைவி மக்கள் சுற்றம் முதலிய தொடர்புகளைக் களைந்து, பின்னே தவம் செய்ய உரிமை உடையார் எனக் கூறுகின்றன. தொல்காப்பியமோ அங்ஙனங் கூறவில்லை அல்லவா ? இவ் விருவேறு அறவுரைகளுள்ளே எது சிறந்ததென ஆராய்ந்து உண்மை காணுங்கள் ! வடவர்கள் தமிழ்மொழியின் சுவையை மாந்தும் பொருட்டு, அதனை வளமாகக் கற்று, பாக்கள் பல இயற்றி அறம்பற்றிக் குறித்துச் செல்லினும், அவர்கள் நோக்கமெல்லாம், மண்ணுவது நாம் திண்ணம் ; நம் வாழ்வெல்லாம் மாயம் ; மாயையின் உருவே பெண் எனவும் பிதற்றித் திரியும் போலி வேதாந்தக் கொள்கைகள் அவர்கள் நூல்களில் மிகுதியும் இடம் பெற்றுள்ளன. அந்தோ ! வடவர்கள் பெண்தெய்வங்களைக் காமக் கருவிகளாகக் கொண்டவர்களே யொழிய, வாழ்வில் துணைசெய்யும் ஓர் ஒப்பற்றவள் பெண் என்பதை உணர்ந்தவர்கள் இல்லை என்பதை அவர்கள் நூல்களே நமக்குத் தெள்ளிதின் விளக்கிக் காட்டியவண்ண முள்ளன. இவர்கள் வழியைப் பின்பற்றி வைப்பு முறையெல்லாம் வடவர்கள் தன்மையே கொண்டுள்ளது என்று திருக்குறள் பற்றி கருத்துரை தரும் அன்பர்கள், வள்ளுவர் வடவர்களுடைய துறவை ஆதரித்து நிற்காமையை துருவித்துருவிக் கண்டின்புறுக.

வள்ளுவப் பெருந்தகையார், தவ வாழ்க்கை மேற்கொள்வோரின் இயல்பைப் பேசவந்த காலத்து, தவஞ் செய்வார்க்குத் தீயதென்று உலகத்தாராற் சொல்லப்பட்டவைகளை நீக்கி விடுவாரானால், அவர் தலையில் உள்ள சிகையைப் போக்கி, மொட்டையாக்கிக் கொள்ளுதலும், அச் சிகையை சடையாக முறுக்கிவிட்டுக் கொள்ளுதலுமாகிய வேடங்கள் வேண்டுவதில்லை என்கிறார்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின் —குறள்

“உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத் தலகையா வைக்கப்படும்” என்ற பெருநாவலர் கருத்தை ஒருபுறம் வைத்து, “உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே”

என்ற தொல்காப்பியருடைய ஆழ்ந்தபொருளுரையை மற்றோர்புறம் அமைத்துக்கொண்டு நோக்கின், அருமை பெருமை வாய்ந்த சான்ற சீலர்கள் எல்லாம் வகுத்துச் சென்ற நெறி இல்லற நெறியேயன்றி வேறல்ல என்பதை நாம் உணர்வோம். ஆதலால் அந்நெறியே அறநெறியாகும் என்பதையுங் காண்க. "அறத்தாற்றி னில்வாழ்க்கையாற்றிற் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன் ?" என்ற வள்ளுவர் வினவையிட்டுக் கேட்டால், அறவாழ்விற்கேற்ற இல்லறமே சிறந்ததெனப் புலப்படும். துவராடையணிந்து முற்றுந்துறந்த முழுஞானிபோல் நடித்து, செய்யத் தகாத செயல்களையெல்லாம் செய்து, மானத்தை மங்கவைத்து, விற்று, நாடெல்லாம் நாக்கழளச் சிரிக்கும் வாழ்வு வாழ்வதைவிட இல்லறவாழ்வு சிறந்ததல்லவா ? ஒருவன் தன் வாழ்நாளில் கருத்தொருமித்துக் காத லின்பங் கண்ட தன் மனைவியையும், அவள்பாற்றோன்றிய அன்புடை மக்களையும் பிரியாதிருந்து, அவருடன் தானும் மேற்கொளும் தமிழ் நாட்டவர் வழக்கே சிறந்தது. இதற்கு உடன்பாடல்லாத, வடவர் கொள்கை எள்ளி நகையாடற்பாலதாம். அவர்கள் மேற்கொண்ட துறவு வாழ்க்கையினும் தமிழர் மேற்கொண்ட தவ வாழ்க்கையே பலவற்றானும் சிறந்ததென்பது இனிது புலனாகும். மனைவி மக்களைத் துறந்து நிற்பதாகிய துறவுநிலை காண்போர்க்கு வெருட்சியே அளித்து நிற்கும். மனைவாழ்க்கையில் இருந்தக்கால் முப்பத்திரண்டு அறங்களையும், தம் உரிமைச் சுற்றமொடு இருந்து செய்துவர, நல்வாழ்வு பெறுவார்கள் கணவனும், மனைவியும் என்பதே தொல்காப்பியர் கருத்து.

அறங்கள் முப்பத்திரண்டு

"ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்கு உணவு,
அறுசமயத்தோர்க்கு உண்டி, ஆவிற்கு வாயுறை,
சிறைச் சோறு, ஐயந், தின்பண்டம், மகச்சோறு,
மகப் பெறுவித்தல், மகவளர்த்தல், மகப்பால்,
அறவைப் பிணஞ்சுடல், அறவைத் தூரியம்,
வண்ணார், நாவிதர், வதுவையாற்றல், நோய்,

மருந்து, கண்ணாடி காதோலை, கண்மருந்து
தலைக் கெண்ணெய், பெண்போகஞ், சுண்ணம், பிறர்துயர்
காததல், தண்ணீர்ப்பந்தர், மடந், தடம், கா,
ஆவுரிஞ்சு நடுதறி ஏறு விடுத்தல்,
விலை கொடுத்து கொலை யுயிர்மீட்டல், விலங்குணு
இச் செயல் முப்பத்திரெண் டறமென்ப''

—தீவாகர நிகண்டு

ஆசிரியர் தொல்காப்பியனார் காட்டிய வழியிலேயே, பண்டு, வடநாடு, தென்னாடுகளில் வாழ்ந்த முனிபுங்கவர்கள் நின்றார்கள் எனத் தெரிய வருகிறது. வடநாட்டு முனிவர்களாகிய மரீசி, அத்திரி, அங்கிரசர், புலகர், கிரது, புலத்தியர், வசிட்டர் முதலாயினோரெல்லாந் தத்தம் மனைவியோடிருந்து, தவஞ்செய்தமையும், தமிழ் நாட்டில் மங்காப் புகழுடன் வாழ்ந்த பாலைக் கௌத்தமனார், திருவள்ளுவர், சுந்தரர் முதலாயினோரும் தத்தம் மனைவியோடிருந்து தவமியற்றி, ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி வடிவினனும், தாட்டாமரைக் காட்டித் தண் கருணைத்தேன் காட்டும் வித்தகச் செம்மல் திருவடிப் பேரின்பத்தை எய்தினமையுமே சான்றாம். இது குறித்தன்றோ தெய்வப் புலவர் திருவள்ளுவனாரும்,

அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பதில் லாயின் நன்று —குறள்

(தெ - பொருள்) இல்லறந் துறவறம் என்னுமிரண்டறங்களுக்குள்ளே நூல்களால் அறமென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே. மற்றைத் துறவறமோ என்றால் பிறரால் நிந்திக்கப்படுங் கூடாவொழுக்க மில்லாதிருந்தால் அதுவும் நன்மையுடைய தென்பதாம். மேற்கண்ட குறளால் நாம் அறிவது அறவாழ்க்கை என்பது இல்வாழ்க்கையே என்றும்,

“ அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன் ? —குறள்

(தெ - பொருள்) ஒருவன் இல்லற வாழ்க்கையைத் தரும வழியிலே செலுத்துவானாகில் மனைவி மக்களைவிட்டு

வனத்திலே சென்று தவஞ்செய்து அடையும் பயன் எது இருக்கிறதென்பதாம். பாவத்திற்குப் பயந்து நல்லவழியால் சம்பாதித்த பொருளை முன் சொன்னபடி பங்கிட்டுக் கொடுத்தலும், அன்புடைமை என்பதாகும்—என்று கூறு மாற்றால் துறவுநிலை புகுதல் பயனில்லையென்றுந் தொல் காப்பியர் வழியே கடைபிடித்துக் கூறியதோடு, துறவு என்பது நெஞ்சினாற் றுறத்தலே என்றும் யான் என்ற அகப்பற்றும், எனது என்ற புறப்பற்றும் ஒருங்கறுத்தலே யாம் என்பதை வலியுறுத்தும் முகமாக,

“ நெஞ்சிற் றுறவார் துறந்தாற்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல் ”

என்றும்,

“ யான் எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்.”

என்றும் அருளியுள்ளார்.

இல்லறத்தில் காதல் மனைவியோடிருந்து, நாளும் அறத் தைப் பேணி வளர்த்தலும், தீயவழிகளில் மனத்தைச் செலுத்தாது நீக்கலும், உண்டாட்டுக் களியாட்டுகளை ஓரள வோடு நிறுத்திவைத்தும், கணவனும் மனைவியும் தவ வாழ்க்கை மேற்கொண்டு, உள்ளொளி பெற்று இறைவ னுடன் ஒன்றுவதே அறவாழ்வின் முடிந்த முடிபாம்.

---

5. கவிப் பகுதி

பாவமும் அறமதாகும்

(வித்வான் சே. வேங்கடராமச் செட்டியார் தமிழ்ப் பேராசிரியர், S. V. O. கல்லூரி, திருப்பதி)

‘பாவமும் அறமதாகும்’ என்ற தொடர்மொழியைக் கண்டவுடன் வியப்பே யுண்டாகும். பாவம் அறமானால் பாவமே செய்யலாமே! அறஞ்செய்வது எற்றுக்கு? என்ற எண்ணங்கள் தோன்றும். யார் செய்யும் பாவம் அற

மாகும் ; எத்தகைய நிலையில் செய்த பாவம் அறமாகும் என்பன பின்னர் விளங்கும். அறம் எது ? பாவம் எது ? இக் கேள்விகட்கு விடைகாண்பது எளிதன்று. ஒரு நாட்டார் பாவம் என்று கொள்வதைப் பிறிதொரு நாட்டார் அறமென்று கொள்கின்றார்கள். ஒரு காலத்தார் பாபம் என்று கொண்டதைப் பிறிதொரு காலத்தார் அறம் என்று கொள்கின்றார்கள். தென்னாட்டு அந்தணர் மீன் உண்ணுவதைப் பாவம் என்று தள்ளுகிறார்கள். வடநாட்டுப் பிராமணர்கள் அது பாவம் என்று கொள்ளாது மீனையுண்கின்றார்கள். பெண்டிரோடு கடல்வழி வெளி நாடு செல்வது பாவம் என்பது பண்டையோர் கொள்கை. இக்காலத்துப் பெண்டிரோடு கப்பலேறிச் செல்வதைப் பாவமாகக் கருதுவதில்லை. பறையர் கோயிலுக்குள் நுழைந்தால் பாவம் வந்துவிடும் என நம்பினார்கள் முன்னோர். இன்றைய நிலையில் பறையரைக் கோயிலுக்குள் புகுவித்தலே புண்ணியமென எண்ணுகின்றனர் நல்லோர். இவ்வாறு தேயவேறுபாட்டானும் காலவேறுபாட்டானும் அறம் பாவங்கள் மாறுபடுவதால் இதுதான் அறம் ; இதுதான் பாவம் என வரையறுத்துச் சொல்லுதல் அரிதே. என்றாலும் அடிப்படையான அறங்கள் இங்ஙனம் காலதேய வேறுபாடுகளால் மாறுபடுவதில்லை.

'அறம்' என்பது எது ? என வள்ளுவரை வினவினால் "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்" எனவும், "அழுக்கா றவாவெகுளி யின்னாச் சொல் நான்கும் இழுக்கா வியன்ற தறம்" எனவும் விளக்கம் தருகின்றார். இதனால் மனத்துக்கண் நிகழும் குற்றமாகிய பொறாமை, ஆசை, கோபம், இவையில்லாதிருப்பதும், மொழிக்கண் நிகழும் குற்றமாகிய கடுஞ்சொல் இல்லாதிருப்பதும் அறம் என்பது போதரும். ஆயின் அவ்வள்ளுவப் பெருந்தகையாரே அறத்துப்பாலில் கொல்லாமை கள்ளாமை முதலியவைகளை அறமென ஓதியுள்ளமையால் அறம் என்னும் சொற்குப் பொருள் இன்னும் விரிவடைகின்றதைக் காணலாம். இங்ஙனம் மேலும் மேலும் விரித்துகொண்டே

செல்வதால் அறம் பாவங்கட்கு இலக்கணம் சுருங்கிய சொல்லால் சொல்வதரிதாகின்றது. இந்நிலையை நினைந்தே பரிமேலழகர், “அறமாவது, மநுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்” எனச் சுருங்கிய வாய்பாட்டால் விளக்கியுள்ளார். இவ்வாறு சொல்வது தவிர வேறு வழியில் சுருங்கச் சொல்லவியலாது. அவர் அறநூல்களுள் முதன்மையாகக் கொண்ட மநுதரும சாத்திரம், ஒரு குலத்திற்கு ஒரு நீதி கூறுகின்றது என்று இக்காலத்துக் குற்றம் கூறப்படுகின்றது. வள்ளுவர் நூலில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் அறம் என்று கொள்வது பொருத்தமாகலாம். தெய்வப்புலவர் திருவள்ளுவனார் விலக்கிய பாவங்களுள் கொலைப்பாவமே மிகப் பெரிய பாவமாகும். அப்பாவத்தினைச் செய்யாதிருத்தல் நல்லறமாகும் என்பது அவர்கருத்து. “ஒன்றாக நல்லது கொல்லாமை” ‘அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று’ என்று விளக்கியிருத்தல் காண்க.

அக்கொலைப் பாவந்தானும் கொல்லப்படும் உயிரின் அறிவிற்கேற்ப வருவதாகும். ஓரறிவுயிராகிய கீரையைக் கிள்ளிச் சமைத்துண்ணுதலும் ஐயறிவுயிராகிய ஆட்டினைக் கொன்று அதன் தசையை மிசைதலும் ஒத்த கொலைப் பாவம் என்று எண்ணல் ஆமா ? கீரையைக் கிள்ளுதலும் உண்ணுதலும் பாவம் என்றே நாம் கருதுவதில்லை. உயிர்கள் என்ற பொதுநோக்கால் நோக்கின் ஓரறிவுயிராகிய கீரையைக் கிள்ளுதலும் பாவந்தானே! ஆடுமாடுகளை அறுத்துப் புசிக்கின்றவர்களையே கொலைப்பாதகர்கள் என்கின்றனர். கீரையைக் கிள்ளிச் சமைத்துண்பவர்களை அப்படி என் சொல்வதில்லை. கீரையும் உயிருள்ள பொருளாயினும் பரிசவுணர்வு தவிர வேறு அறிவுகள் அதன்பால் இல்லை. கிள்ளும்போது அக்கீரையின் துடிப்பும் துன்பமும் கிள்ளுவோர்க்கோ பிறர்க்கோ வெளிப்படையாக விளங்குவதில்லை. ஆடுமாடுகள் ஐயறிவுடையன ; அவற்றை வெட்டும்போது கதறியும் அழுதும் துடித்தும் தம் துன்பத்தை வெளிப்

படையாகக் காட்டுகின்றன. கொல்லப்படும் அவற்றின் துன்பம் எனைத்தென்பதைப் பலரும் அறிய வியலுகின்றது. எனவே ஐயறிவுயிராகிய ஆட்டினை யறுப்பதற்கும் ஓரறி வுயிராகிய கீரையைக் கிள்ளுவதற்கும் வேறுபாடு பெரி துண்டு. முன்னது கொலைப்பாவம் தருவதெனவும் பின் னது அன்னதன்று எனவும் எண்ணினர் சான்றோர். உயிரின் அறிவு மிகுதிப்பட மிகுதிப்பட அவ்வறிவு மிக்க வுயிரினைக் கொல்லும் பாவமும் பெரிதாதலை இதுகொண் டறியலாம்.

ஐயறிவினையுடைய பறவை விலங்குகளைக் கொல்லும் பாவத்தினும் அவற்றினும் மேம்பட்ட ஆறறிவுடைய மக் களைக் கொல்லும் பாவம் மிகப் பெரியதாகும். மக்களுடைய அறிவும் ஒரு தன்மையதாக வின்றி, ஏற்றத்தாழ்வுகளையுடை யது என்பதை யாரும் அறிவர். குறைந்த அறிவுடைய வனும் மக்களுள் ஒருவனே எனினும் அவனைக் கொன்ற பாவத்தைக் காட்டிலும், நிறைந்த அறிவுடைய அருளாளன் ஒருவனைக் கொன்ற பாவம் மிகப் பெரியதாகும். மக்களுக் கெல்லாம் அன்பு நெறியை அறிவுறுத்திய அண்ணல் காந்தி யடிகளைக் கொன்ற பாவமும் கொலைப்பாதகனாகிய கோட்சே யைக் கொன்ற பாவமும் ஒருதன்மையதே என எவரேனும் எண்ணுவரா ? இருவரும் மக்கட் பிறப்பினரே எனினும் அவரைக் கொன்ற பாவங்கள் மிகுதியுங் குறைவுமாக வேறு படுகின்றன என்பதை யாரும் ஏற்றுக் கொள்வர்.

கொலைப்படும் உயிரின் அறிவு மிகுதிக்கேற்பக் கொலைப் பாவம் மிகுதிப்படுதல் போலவே, கொலை செய்பவரின் அறிவு மிகுதிக் கேற்பவும் கொலைப்பாவம் மிகுதிப்படும். ‘கொலை செய்வது பாவம்’ என்பதை யறியாத ஒருவேடன் கொலை செய்வானாயின், அவன் அறியாது செய்தமையால் அவற்கு வரும்பாவம் குறைவானதே. கொலை செய்வது

பெரும் பாவம் என்பதை நூற்கேள்விகளால் நுண்ணிதின் உணர்ந்து வைத்தும் ஒருவன் கொலை செய்வானாயின் அவனுக்கு வரும் பாவம் மிகப்பெரிது. அப்பாவம் அறிந்து செய்ததாகலின் மன்னிக்க முடியாத பாவமாகும். இந்நெறியால் நோக்கின் அறிவிற்பெரிய ஒருவனை அறிவிற் சிறந்த மற்றொருவன் கொன்றால் அவனுக்கு வரும்பாவம் மிகமிகப் பெரிதாகும். அத்தகைய பெரும்பாவம் அறமாகுமாயின் அதுவே வியப்பினும் வியப்பாகும். சண்டேசுரர் செய்த கொலைப்பாவமே அத்தகைய பெரும்பாவம். அப்பெரும் பாவமே அறமாகிப் பயன் தந்தது எப்படி என்பதைக் காணலாம்.

சண்டேசுரர், அந்தணச் சிறுவர்; எச்சதத்தன் புதல்வர். இளமையிலேயே பலகலையும் பயின்றவர். மறைநெறியறிந்தவர். கல்விக்குப் பயன் கடவுளை வழிபடுதலே என்பதை அறிந்து நடப்பவர். ஒருநாள் ஊர்ப்பசுக்கள் மேயப் புறப்படும்போது இவரும் வீட்டிலிருந்து புறப்பட நேர்ந்தது. கன்றையீன்ற பசுவொன்று இடையன்மேல் படும்படிக் கொம்பினையசைத்து விட்டது. வந்தது— கோபம் இடையனுக்கு. அடித்தான் கோலால். கண்டார் சண்டேசுரர். வெகுண்டார்; அவனை விலக்கினார். அறிவிலாத அவ்வாயனுக்கு ஆவின் பெருமைகளை அறிவுறுத்தினார். சிவபிரானுக்கு ஆட்டுதற்குரிய திருமஞ்சனமைந்தும் தரும்பெருமையுடையதும் அப்பிரான் சாத்தும் திருவெண்ணீறு தருவதும் ஆனினங்கள் அல்லவா? சிவபிரான் உகந்தேறு விடைத்தேவர் இவ்வாவின் குலந்தானே! என்று விளக்கினார். “இத்தகைய பெருமைவாய்ந்த பசுவையடித்த நீ, இனிப்பசுக்களை மேய்க்கத்தகுதியில்லை. யானே மேய்க்கின்றேன்” என மேய்க்கத் தொடங்கினார். இவர் மேய்க்கத் தொடங்கினவுடன் பசுக்கள் கொழுத்தன.

மேயும் இடங்களில் கன்றை நினைந்து பாலைச் சொரிந்தன. சொரியும் பால் நிலத்தில் வீழ்ந்து வீணாதலைக் கண்டார். மண்ணியாற்று மணலில் இலிங்கம் அமைத்து அதற்கு அந்த ஆவின்பாலைக் கறந்து திருமஞ்சன மாட்டி மகிழ்ந்தார். நாள் தோறும் இவர் இவ்வாறே பாலை மணல் இலிங்கத்திற்குச் சொரிகின்றார் என்பதைச் சிலர் அறிந்து எச்சதத்தனிடம் சொல்லி வருந்தினார்கள். எச்சதத்தன் மறுநாள் மறைந் திருந்து சண்டேசுாருடைய செயலைக் கவனித்துக் கொண் டிருந்தான். சண்டேசுரர் வழக்கப்படி மணலில் இலிங்கம் சமைத்துப் பால் குடங்கள் கொண்டு அதற்குத் திருமஞ் சனமாட்டினார். கண்டான் எச்சதத்தன். வெகுண்டு விரைந்துவந்து மகனுடைய முதுகில் கைத்தண்டு கொண்டு அடித்தான்.

சிவபிரான்பால் வைத்த சிந்தையராய்த் திருமஞ்சன மாட்டும் சண்டேசுரர்க்கு அடித்தது தெரியவில்லை. திரு மஞ்சனம் ஆட்டும் பணியை அன்புடன் செய்து கொண் டிருந்தார். அடித்தும் வைதும் இவன் திருந்தவில்லை யென எச்சதத்தன் எண்ணித் திருமஞ்சனக் குடத்துப் பாலைக் காலால் இடறிச் சிந்தினார். சிந்தும்போது கண் டார் தந்தையை. இத்தீய செயலைச் செய்தவர் தந்தையே யாயினும் சிவனுக்கு மஞ்சனம் ஆட்டும் பாலைக் காலால் தள் ளியதால் அக்கால்கள் சிதறும்படி அடிக்கப் பக்கத்திலுள்ள கோலையெடுத்தார் சண்டேசுரர். அக்கோலே மழுவாயிற்று. வீசினார். கால்துணிந்து வீழ்ந்தான் எச்சதத்தன். சண் டேசுரர் முன்போலவே மீண்டும் சிவபிரானுக்கு அருச்சனை செய்தார். சிவபிரான் பார்வதியோடு விடைமேல் தோன்றி னார். சண்டேசுரர் கண்டு மகிழ்ந்து கண்ணீர்வாரக் கைதொழுது நின்றார். 'எம்பொருட்டாகப் பெற்ற தந்தையை வெட்டி வீழ்த்தினாய். இனி அடுத்த தந்தை

நாமே' என்று சிவபிரான் சண்டேசுரரை அணைத்து உச்சி மோந்தார். சிவபிரான் பரிசம்பட்டவுடன் சண்டேசுரர் அயன் முதலாகிய அமரர் தொழத்தக்க ஒளிவடிவமாக விளங்கினர். சிவபிரான் அவரைத் தொண்டர்க்கு அதிபர் ஆக்கினர். சண்டீசுரப்பதமும் கொடுத்தார் என்பது வரலாறு.

சண்டேசுரர் செய்தது மிகப்பெரிய பாதகம் ஆக வேண்டிய செயல்தான். அவர் அந்தண வருணத்தவர், பிரமசாரி. அருங்கலை கற்றவர். உயிர்களின் துன்பங்களை உள்ளவாறு உணரும் உளம்படைத்தவர். இடையன் பசுவினை அடித்ததையே பொறாது அவனை நீக்கி ஆக்களைத் தாமே காத்தவர். அத்தகைய அருளாளர், கொலை செய்தாராயின் அறிந்து செய்த குற்றமாய்ப் பெரும்பாவமாக மதிக்கப்படவேண்டும். மேலும் கொலையுண்டவன் வேதியன். அறிவினற் பெரியவன். "பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர், எனப்பார்ப்பனரைக் கொல்லுவது பெரும் பாவமாகக் கருதப்படுகின்றது. 'அந்தணன்' என்பது மாத்திரை யன்றித் தந்தையுமாவான். தம்பிறப்பிற்கும் வளர்ப்பிற்கும் காரணனுயிருந்த தந்தையைக் கொல்லுதல், நன்றிகொன்ற பெரும்பாதகமாகும். இங்ஙனம் கொலை செய்தோரும் கொலையுண்டோரும் பேரறிவுடையராயிருந்த வின் இக்கொலை செய்தார்க்கு வரும்பாவம் மிகப்பெரிது என்பதில் ஐயமில்லை. இத்தகைய மாபாதகம் செய்த சண்டேசுரர் மீளா நரகம் புகவேண்டியிருக்க வீடுபேறெய் தினர் என்பதுதான் நாம் கேட்கும் வரலாறு.

இந்நிகழ்ச்சியை மணிவாசகப் பெருமான் சுருக்கமாக விளக்கியுள்ளார் ஒரு பாடலில் :—

தீதில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்

சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்

என்றது காண்க.

இதனால் சண்டேசுரர் செயல் பெரும்பாதகமாயினும் சிவகருமம் சிதைத்தமைக்குத் தண்டனையாகச் செய்யப்பட்டதேயொழிய தந்நலம் கருதிச் செய்யப்படவில்லையாதலின் அப்பாதகமும் புண்ணியமாகவே சிவபிரானால் கொள்ளப்பட்டது என்பது விளங்கும். அருணந்தி சிவாச்சாரியாரும் இக்கருத்தையே சித்தியாரில் :—

"அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்
பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நாரினில் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே"

எனச் சிவபத்தர்கள் செய்யும்பாவமும் அறமாவதற்கு எடுத்துக் காட்டியுள்ளமை காண்க. சிவபத்தியுடையார் சிவபூசைக்கு முட்டுப்பாடு நேர்ந்துழி அதைநீக்கிச் செய்த பாதகமும் அறமானாற்போலவே, சிவபத்தியில்லார் செய்யும் புண்ணியமும் பாவமாகும். புண்ணிய வினையாக எண்ணப்படும் பெருவேள்வியைச் செய்த தக்கன், அவ்வேள்வியால் மேன்மையடையாது அழிவு அடைந்தமை இதற்கு உதாரணமாகும். செய்தவினை நல்வினையாயினும் தக்கனுக்குச் சிவபத்தியின்மையால் தீவினைப் பயனையே யடைந்தான். சண்டேசுரர் செய்தவினை தீயதேயாயினும் அவர் சிவபத்தி காரணமாகச் செய்தமையால் நல்வினைப் பயனைத் தந்து நின்றது. சண்டேசுரர் மனிதர் ; மேலும் பாலர். தக்கன் தேவன் ; பிரமகுமாரன். சண்டேசுரர் செய்தது மாபாதகம் ; தக்கன் செய்தது மாவேள்வி. இவ்வளவு வேறுபாடு இருந்தும், பாவஞ் செய்தோர்க்கு அறப்பயனும் புண்ணியஞ்

செய்தோர்க்குப் பாவப்பயனும் வந்ததை எண்ணிப்பார்க்க வேண்டும். அறம்பாவங்கள் செய்வாரது வன்மைமென்மை களால் பயன் தரவில்லை. செய்யப்படும் அச்செய்வினைகளின் வன்மைமென்மைகட் கேற்பப் பயன் விளையவில்லை. அவற்றைக் கொள்வோரின் தன்மை நோக்கியே பயன் விளைகின்றன என்பதை இவற்றான் அறியலாம். இத்தகைய பெரும் பாதகத்தையும் புண்ணியமாக்கி வீடுநல்கும் சிவபிரான் வழிபாட்டைச் சிறக்கச் செய்து மக்கள் பயன்பெறும் நாள் எந்நாளோ ?

"பிதாவைக் கொலை புரிந்தான் குற்றங் கடிந்தான்."

---

7. ஆராய்ச்சிப் பகுதி

இல்லையேல் உண்டு

(R- பஞ்சநதம் பிள்ளை, தமிழ் ஆசிரியர், திருச்சிராப்பள்ளி)

தற்கால வாழ்க்கையில் மனித சமூகத்துக்கு வேண்டிய பொருள்கள் சரிவரக் கிடைக்கப்பெறமல் அல்லலுற்று வருவதைப் பார்க்கிறோம். எங்கும் உணவில்லை, உடையில்லை, இல்லை இல்லை என்ற பேச்சே கேட்கப்படுகிறது. சமூகத்துக்கு உதவி செய்யும் நிலையிலுள்ள வியாபாரிகளும் சில சமயங்களில் பொருளை மறைத்து வைத்துக்கொண்டு இல்லை என்கின்றனர். முற்காலத்தில் இல்லை என்று சொல்வதே ஓர் அமங்கலமாகக் கருதிவந்தனர். அடியார்களில் இல்லை என்று கூறாத ஒருவர் உண்டு. 'இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்' என்கிறார் சுந்தரர். 'சாதலின் இன்னாததில்லை இனிததூஉம் ஈதல் இயையாக் கடை' என்று வள்ளுவர் கூறுகிறார். 'செல்வம் என்பது சிந்தையின்

நிறைவே ' என்கிறார் குமரகுருபரர். ' செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே ' என்கிறார் சம்பந்தர்.

உலகினருடையநிலை ஒருவாறிருக்க, மனத்தெளிவுடைய சான்றோர், தம் மதிநலத்தால் இன்ப துன்பங்களைச் சமமாகக் கொள்வர். தங்களுக்கு வேண்டிய பொருள் கிடைக்காவிடினும் இல்லையே என்று ஏங்கித் தவிக்காமல் தம்மிடம் உள்ள பொருள்களைக் கொண்டே இன்புறுவர். இங்ஙனம் இன்புற்ற பெரியோர்களில் சிலரைப் பார்ப்போம். சிறுநூல்களில் கச்சிக்கலம்பகம் ஒன்று. காஞ்சிப்பதியிலுள்ள பெருமான்மீது பாடப்பட்ட நூல். இதில் ஓர்பாடலில் ஆசிரியர் தம் நெஞ்சைக் கேட்கிறார். "இறைவனைப் போற்றுவதற்குப் பலபாடல்கள் உண்டு. அவனுடைய புகழைக் கேட்பதற்குச் செவிகள் உண்டு. தினமும் மலர் பறித்து அர்ச்சிப்பதற்குக் கைகள் உண்டு. வணங்சுத் தலைஉண்டு. துதிப்பதற்குச் செம்மையான நாவுண்டு. தலைவனாகக் கச்சிப் பெருமானுண்டு. வருந் துன்பங்களைப் போக்க அவனது திருவருள் உண்டு. இவைகள் எல்லாம் இருக்கும்போது நெஞ்சே ஏன் துயரப்படுகிறாய் " இக்கருத்துக்களை உடைய பாடல் வருமாறு :—

" போற்றப்பல் பாவுண்டு கேட்கச் செவியுண்டு பூப்பறித்துத்
தூற்றக் காமுண்டு தாழச் சிரமுண்டு தோத்திரங்கள்
ஆற்றச் செந்நாவுண்டு தென்கச்சி வாணருண்டு அல்லலெலாம்
மாற்ற அருளுண்டு நெஞ்சே துயரெவன் மற்றெனக்கே "

இனி முற்றும் துறந்த பட்டினத்தடிகள் பாடிய பாடல்களில் ஓர்பாடல். சீர்காழிக்குரிய பல பெயர்களில் கழுமலம் என்பது ஒன்று. ஓர் முனிவர் இத்தலத்துக்கு வந்து ஞானோபதேசம் பெற்று மலம் (அஞ்ஞானம்) கழுவப்பெற்ற காரணத்தால் கழுமலம் என்ற பெயர் ஏற்பட்டதென்பர்.

இதற்குத் தோணிபுரம் என்றும் பெயருண்டு. இத்தலத்தைக் குறித்து அடிகள் திருக்கழுமல மும்மணிக்கோவை என்ற ஓர் நூலைப் பாடியுள்ளார். அதில் ஒரு பாடலில் ஒன்றும் பெறுவிடில் நஞ்சுண்ட கண்டனை நினைப்பதற்குத் தன் நெஞ்சுண்டு என்கிறார். "செப்பையும் சூதாடு கருவியையும் ஒப்பாகச் சொல்லமுடியாத தனங்களையுடைய பார்வதியைப் பக்கத்தில் கொண்ட பெருமான் – தோணிபுரம் என்னும் சீர்காழிப்பதியில் இருப்பவன் – அவனுடைய தாமரை போன்ற திருவடிகளைத் தியானிப்பதற்கு மலர்கள் கிடைக்காவிடில் பச்சிலை உண்டு. எங்கும் தண்ணீர் உண்டு. ஒன்றும் கிடைக்காவிடில் என் நேஞ்சுண்டு" இக்கருத்துக்களுடைய பாடல் :—

"போதும் பெறுவிடில் பச்சிலையுண்டு புனலுண் டெங்கும்
ஏதும் பெறுவிடில் நேஞ்சுண்டு இன்றே இணையாகச் செப்பும்
சூதும் பெறுமுலைப் பங்கர்தென் தோணிபுரேசர் வண்டின்
தாதும்பெறுத அடித்தாமரை சென்று சார்வதற்கே"

அடிகள் மற்றோர் பாடலில் பெருமான் உடனிருந்து காத்து வருவதால் ஓர் குறைவும் இல்லை எனக் காட்டுகிறார்.

"உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று வெய்யிலொடுங்கி வந்தால்
தடுக்கப் பழையவொரு வேட்டி யுண்டு சகமுழுதும்
படுக்கப் புறந்திண்ணை யெங்கெங்கு முண்டு பசித்துவந்தால்
கொடுக்கச் சிவனுண்டு நேஞ்சே நமக்குக் குறைவில்லையே"

காரைக்காலம்மையார், ஈசனை மனக்கினிய வைப்பாக வைத்ததனால் தனக்கு அரியதொன்று உண்டோ எனக் கேட்கிறார்.

"எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்

கொண்டேன் பிராணுகக் கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய தொன்று ''

'உள்ளதே போதும்' என்கிருர் தாயுமானவர். திருவருட்பிரகாச வள்ளலார் – இராமலிங்க அடிகள் தமக்கு உள்ளனவற்றை அடுக்கிக் காட்டுகிருர் :

" சந்தத மெனக்கு மகிழ்தந்தை நீயுண்டுநின்
றன்னிடத் தேமவல்லி
தாயுண்டு நின்னடிய ரென்றுநற் றமருண்டு
சாந்தமெனு நேயருண்டு
புந்திகொள் நிராசையாம் மனைவியுண் டறிவெனும்
புதல்வனுண் டிரவுபகலும்
போனவிட முண்டருட் பொருளுமுண் டானந்த
போகபோக் கியமுமுண்டு
வந்தனைசெய் நீறெனுங் கவசமுண் டக்கமா
மணியுமுண் டஞ்செழுத்தாம்
மந்திரப் படையுண்டு சிவகதி யெனும்பெரிய
வாழ்வுண்டு தாழ்வுமுண்டோ ?

ஆகவே இறைவன் திருவருளால் பெறுவன பெற்றுத் துய்ப்பன துய்த்து இன்பம் பெறுவோமாக.

திருமூலர் மந்திரமும்-மெய்கண்டார் சிவஞான போதமும்

துடிசை கிழார்

(மலர் 24 ; இதழ் 7 ; 303-ம்பக்கத் தொடர்ச்சி)

சத்தி நிபாதமுற்று, வினை ஒப்பாகிய காலத்து, குருவாக வந்தருளி, அநுக்கிரகம் செய்தபின், ,என் இயல்பை அறிதற்கு ஏதுவாகிய ஞானசத்தியாகிய அறிவை அறிந்த

பின், என்செயல் எல்லாம் நின்செயல் ஆதலின், என் இயல்பை மறந்து, சிவானந்தத்தில் அழுந்தி, நிற்றலால் உன் இயல்பையே நாடுகின்றேன்.

என்னை அறிதலாவது :—10 - 2

"நாமல்ல இந்திரியம் நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமும் அரனுடைமை—யாமென்னில்
எத்தநுவி னின்றும் இறைபணியார்க் கில்லைவினை
முற்செய் வினையுந் தருவான்முன்"

இப்படியே, சிவஞானபோதமேயன்றி ஏனைய சித்தாந்த சாத்திரங்களும் தமிழ் மூவாயிரக் கருத்துக்களை எடுத்து விளக்கியுள்ளன.

மந்திரம்

ஆணவம் மாயையும் கன்மமும் ஆமலம்
காணும் முளைக்குத் தவிடு-உமி ஆன்மாவும்
தாணுவை ஒவ்வா மற்றண்டுலமாய் நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே 2151

போதம்

2-2 நெல்லிற் குமியும் நிகழ்செம்பிற் களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அவர்சோகம் செய்கமலத் தாம்

மந்திரம்

நாக முடலுரி போலும் நல்லண்டசம்
ஆக நனுவிற் கனுமறந் தல்லது
போகலு மாகும் அரனருளாலே சென்று
ஏகுமிடஞ் சென்று இருபயன் உண்ணுமே 2093

உண்டு நரக சுவர்க்கத்தில் உள்ளன
கண்டு விடும் சூக்கம் காரணமாச்செலப்
பண்டு தொடப்பர காய யோகிபோற்
பிண்டம் எடுக்கும் பிறப்பிறப் பெய்தியே 2094

போதம்

2-3 கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து
விண்படர்ந் தத்தூடு வினையினால்—கண்செவிகெட்டு
உள்ளதே தோற்றம் உளமணுவாய்ச் சென்றுமனம்
தள்ளவிழுங் கருவிற் றான்.

அரவு தன் றோலுரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போயவரு மப்பண்பும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டம் என்பது
அடாதுள்ளம் போமா றது.

மறை பொருட் கூற்று

ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
சாறு படுவன நான்கு பனையுள
ஏறற் கரியதோர் ஏணியிட் டப்பனை
ஏற லுற்றேன் கடல்ஏழுங் கண்டேனே 2828

இ - ள் :—ஆறுதெரு—ஆறு ஆதார நிலைகள். சந்தி—மூலத்துவாரம். சாறுபடுவன—ஆனந்தத்தேன் பிலிற்றுவன. நான்கு பனை—நான்கு இதழ்களையுடைய பனைமடல் போன்ற ஆஞ்ஞைத்தானம். ஏணி—சுழுமுனை. கடல் ஏழ்—ஏழ்பிறப்பு.

மூலாதாரம்—3 இதழ் ; சுவாதிட் - 6 இதழ்; மணிபூர- 10 இதழ் ; அனுக - 12 இதழ் ; விசுத்- 16 இதழ்; ஆஞ்ஞை 4 இதழ். ஆக 51 இதழ்கள்.

வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுது கொண்டோடினர் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே 2829

இ-ள் :— வழுதலைவித்து - யோகப்பயிற்சி ; பாகல் - வைராக்கியம் ; புழுதி - தத்துவ ஆராய்ச்சி ; பூசனி-சிவம்,

தோட்டக்குடி - இந்திரியாதி விடயங்கள் ; வாழைக்கனி - ஆன்மலாபம் ; பழுத்தது - கிடைத்தது.

ஏற்றம்இரண்டுள ஏழு துரவுள
மூத்தாள் இறைக்க இளையாள் படுத்தநீர்
பாத்தியிற் பாயாது பாழ்பாய்ந்து போயிடில்
கூத்தி வளர்த்ததோர் கோழிப் புள்ளாமே 2833

இ-ள் : ஏற்றம் இரண்டு-இடைகலை-பிங்கலை; ஏழுதுரவு ஆறு ஆதாரம்-சகசிர அறை; மூத்தாள் - சந்திரகலை ; இளையாள் - சூரிய கலை ; பாத்தி - நாடி ; பாழ்பாய்ந்து - நால் அங்குலம் கூடிக் கொள்ளாமல்.

vide கூடமெடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர்-மீளுவர் பன்னிரண்டு அங்குலம்
நீடுவர் எண்விரற் கண்டிப்பர் நால்விரல்
கூடிக்கொளிற் கோல அஞ்செழுத் தாமே

vide வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத் திரண்டும் இரேசித்து
காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்டு
ஓமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே

சுவாசத்தை 12 அங்குலமாக் கொண்டால்

வெளியே போவது	=		1
திரும்பிவருவது	= 8/12	or	2/3
16 மாத்திரை பூரித்தால்	2/3 × 16	=	10-2/3
64 ,, கும்பித்தால்	1/3 × 64	=	21-1/3
32 ,, இரேசித்தால் போவது		=	32

இப்படி செய்தால் 4 அங்குலம் வீண்போவதில்லை.

தட்டான் அகத்தில் தலையான மச்சின்மேல்
மொட்டாய் எழுந்தது செம்பால் மலர்ந்தது
வட்டம் படவேண்டி வாய்மை மடித்திட்டு
தட்டான் அதனைத் தகைத்துக் கொண்டானே 2836

இ-ள் :— தட்டான் - சீவன் ; அகம் - உடல் ; தலையானமச்சு - சகசிர அறை ; மொட்டு - உள்ளம் ; செம்பால் - செம்மையாகிய சிவம் ; வட்டம் - பிரணவமுத்தி ; வாய்மை - அஞ்செழுத்து ; மடித்திட்டு - எண்ணி ; அதனை - அஞ்செழுத்தை ; தகைந்து கொண்டான் - வாசிப் பழக்கம் செய்து கொண்டான்.

கூகையும் பாம்பும் கிளியொடு பூஞையும்
நாகையும் பூழும் நடுவில் உறைவன
நாகையைக் கூகை நணுகல் உறுதலும்
கூகையைக் கண்டெலி கூப்பிடு மாறே 2851

இ-ள் :— கூகை – அஞ்ஞானம்; பாம்பு – காமன் ; கிளி – அறம்; பூஞை – மறம் ; நாகை – சிற்றறிவு; பூழ் – குரோதம் ; எலி – சீவன்.

கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்
கட்டியும் தேனும் கலந்துண்ண மாட்டாதார்
எட்டிப் பழத்துக்கு இளைக்கின்ற வாறே 2861

இ-ள் :— கொட்டி – சகலம் ; ஆம்பல் – கேவலம் ; குளம் – ஆன்மா ; எட்டி – வேம்பு–வெறுக்கத்தக்க நாமம் ; உருவம் – அல்லது ; நான் - எனது.

வாழை – கட்டி - தேன் - சத்து - சித்து - ஆனந்தம் எட்டிப்பழம் - எட்டு+இப்பழம் – எளிதிற் சித்திக்கும் இவ்வுலக போகம்.

குறிப்பு :— கண் கவர் வனப்பினதாகிய எட்டிப்பழம் நச்சுத்தன்மையை உடைமைபோல, இன்பம் போலத் தோன்றும் உலக இன்பங்களாகிய துன்பங்கள்.

(முற்றும்)

---

9. ஒழிபு

உ
சிவமயம்

கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் இருபத்துநான்காம் ஆண்டு விழாவைத் தமது சொந்த செலவில் திருவெண்ணெய்நல்லூரில் 1929-ம் ஆண்டில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமையில் மிகச் சிறப்பாக நடத்தியவரும், திருவெண்ணெய்நல்லூர்ப் பெருமை, மெய்கண்டாரும் சிவஞான போதமும், முருகன் மூந்நூல் முதலியவற்றைத் தமது சொந்த செலவில் வெளியிட்டவரும், கம்பர் கல்விக் கழகத்தை நிறுவி அதன் சார்பில் ஒரு உயர்நிலைப்பள்ளியையும் மாணவரில்லத்தையும் நடத்திவருபவரும், நமது சமாஜ போஷக உறுப்பினருள் ஒருவருமாகிய உயர்சைவத்

திருவாளர் -

மு. சின்னசாமி ரெட்டியாரவர்கள்

அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது
நடைபெறும் பாராட்டுக் கூட்டத்தில்
சைவ சித்தாந்த மகா சமாஜம் வாசித்தளிக்கும்

வாழ்த்துப்பா

அருட்டிறம் விளங்கும் தாயார்
அரங்கநா யகியார் பாலே
இரட்டணை ஊரில் வந்த
இரெட்டிநற் குலத்துத் தோன்றல்
வெருட்டிறம் கடிந்த நல்லோன்
வேங்கட சுப்ப மேலோன்
தெருட்டிறத் தீன்ற செம்மல்
திருமிகு சின்ன சாமி 1

கலைவளர் தமிழும் ஆங்கி
லத்தொடு களிதெ ளுங்கும்
நிலைவளர் உழவும் நன்றே
நெறியுறப் பயின்ற பின்னர்

மலைவளர் அகிலும் பீலி
    மலரொடு மணியும் தேக்க
அலைவளர் புனலார் பெண்ணை
    அழகமர் வெண்ணெய் நல்லூர் 2

இல்லற வளாக மாக்கி
    எண்ணிடும் ஐஐங் தாண்டில்
நல்லறச் செல்வி யாய
    நங்கையாம் மங்கை தன்னைச்
சொல்லறம் பலவும் ஆற்றத்
    துணையென மணந்தின் புற்றே
பல்லறம் செழிக்கும் மக்கள்
    ஐவரைப் பரிவின் ஈன்றான் 3

அருட்டுறை அண்ணல் பாதத்
    தளவிலா அன்பில் மிக்கோன்
பொருட்டுறை மேழிச் செல்வம்
    புகழுடன் விளங்கப் பெற்றோன்
இருட்டுறை கடியும் கல்வி
    இளைஞருக் கூட்டும் மேலோன்
மருட்டுறை ஒழித்த சீலம்
    மலிந்தவர் விரும்பும் தக்கோன் 4

மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய்
    மேவிவாழ் மெய்கண் டான்தாள்
சென்னியிற் சேர்த்துச் சைவச்
    செந்நெறி நுட்பம் எல்லாம்
மன்னிய தமிழ்நா டெங்கும்
    மருவிடச் சமாஜம் சேர்ந்து
சென்னையில் அறிஞர் பல்லோர்
    சிறந்தநட் பாள ரானான் 5

கோவலூர் ஆதீ னத்தார்
    குரவனார் ஞானி யார்பால்
ஆவலூர் அடியார் ஈட்டம்
    அணைந்தருள் பெறுதல் நோக்கிச்

சேவலூர் கொடியான் வேலன்
செம்மலர் நோன்றுள் போற்றி
நாவலூர் ஈசன் தோழன்
நம்பியின் கழல்கள் பற்றி 6

ஞானியார் தலைமை தாங்க
நாவலர் அவையைக் கூட்டி
மானியார் பாண்டி நாட்டு
மக்களை அழைக்க அன்னூர்
மேனியார் நீற்றுப் பூச்சும்
விழுமிய கண்டிப் பூணும்
வேணியார் வெள்ளி வெற்பன்
வேடமே போன்ற தம்மா 7

தொண்டு வந்த தவக்கு ழாங்கள்
சொல்லின் தேனைச் சுவைத்தபின்
கொண்டு வந்து மனைப்பு குந்து
குலாவு பீடம் இருத்தியே
உண்டி நாலு விதத்தி லாறு
சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் அன்ப ரிச்சையில்
அமுது செய்ய அளித்தனன் 8

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க அன்பின்
கோன்முறை குடிகள் ஆள்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
வேன்மயில் முருகன் வாழ்க
விமலனூர் உணர்வின் என்றும்
மேன்மைகொள் சின்ன சாமி
மிகுவளம் படைத்து வாழ்க.* 9

திருவெண்ணெய்நல்லூர்
கர ஆடிமீ விசாக நன்னாள்
10–8–1951

இங்ஙனம்
சைவசித்தாந்த மகாசமாஜத்தினேம்

---

*மயிலைகிழார் இளமுருகனூர் பாட்டு.

நடந்தது. அப்போது நாமக்கல் கவிஞர் மாநாட்டைத் திறந்துவைத்தார்கள். பல அறிஞர்கள் பேசினார்கள். சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. சங்கக் கட்டடத்தண்ணீர் கோடல் சடங்கு நடைபெற்றது.

தமிழில் அருச்சனை

இராமநாதபுரத்துச் சைவஇளைஞர் மகாநாட்டின் தீர்மானத்தையொட்டிச் குன்றக்குடிகோவிலில் தமிழில் அருச்சனை செய்ய முடிவாகி அருச்சகர்களும் இசைந்துவிட்டனர். ஆடிக்கிருத்திகை முதல் அது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. விநாயகர் அகவல், போற்றித் திருத்தாண்டகம், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், கந்தரலங்காரம், சண்முகார்ச்சனை, திருமுறைத்திரட்டு இவைகளை முறையே விநாயகர், சிவபெருமான், அம்பிகை, முருகன், சண்டேசுரர் இவர்கள் சந்நிதிகளில் அருச்சனை செய்யப்படும்.

சென்னை, சைதாப்பேட்டை, திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா 4, 5-8-1951 நாட்களில் திருவாளர். ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

காரைக்குடி திருவாசக மடத்தில் 8-7-51 திருவாசக விழா நடந்தது. குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் தொடங்கி வைத்தார்கள். திரு. ராய. சொக்கலிங்கன் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

சமாஜ வெளியீடுகள்

	ரூ.	அ.
பெரியபுராணம்—அகராதியுடன் ...	3	0
நாலாயிரதிவ்ய பிரபந்தம் ...	3	0
சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ...	1	0
திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 1 0 திருவாசகம் மூலம் ...	0	4
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பொழிப்புரை	0	1
குகார்ச்சனை திருமந்திரம் ...	0	1
திருவாசகத் திரட்டு 6 பை சீவக சிந்தாமணி	1	12
கந்தரநுபூதி (உரையுடன்) 0 2 முருகன் முந்நூல்....	0	3
அப்பர் திரட்டு 6 பை சம்பந்தர் திரட்டு	0	1
திருப்போரூர்ச் சந்நிதிமுறை	0	12
திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு	7	0
சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) ...	0	8
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப்பல்ல. ...	0	2

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்)ஒன்று ஒரு ரூபா வீதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Street, Vellala Teynampet, Madras-6, P.I.Card No. M. S. 81.